Find us on facebook/tamilmirror · Follow us on tamilmirror · epaper/tamilmirror.lk

AUGUST 20, 2020
THURSDAY
VOL: 006/077
RS. 10.00
PROVINCIAL

தமிழ் Mirror
www.tamilmirror.lk



## 9 ஆவது நாடாளுமன்றத்தின் அங்குரார்ப்பணம்


சுதந்திரத்தின் பின்னரான 16ஆவதும் 1978ஆம் யாப்பின் கீழ் 9ஆவதுமான நாடாளுமன்றத்தின் அங்குரார்ப்பண அமர்வு, இன்று (20) முற்பகல் 9.30க்கு ஆரம்பமாகும். சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவரைத் தெரிவு செய்வது, எம்.பிக்கள் பதவிப்பிரமாணம் செய்வது மட்டுமே அமர்வில் நடைபெறும்.

இந்த அமர்வு, சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவுக்கானது.

ஐந்து வருடங்களைக் கொண்ட இந்த நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கும் 225 உறுப்பினர்களும், சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பர். அது, பிரித்தானிய நாடாளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

நாடாளுமன்றத்தின் தலைமை அதிகாரியாக சபாநாயகர் இருப்பார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மார்ச் 2ஆம் திகதி நள்ளிரவுடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து, 2020 ஏப்ரல் 25ஆம் திகதியன்று தேர்தலை நடத்துவதற்காகத் திகதி குறித்தார். கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, அந்தத் தேர்தல் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது. அதன்பின்னர், 2020 ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று வாக்களிப்பு நடத்தப்பட்டது.




கடுமையான சுகாதார வழிகாட்டலின் கீழ், ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குப் புதிய உறுப்பினர்கள் 225 பேரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, 145 ஆசனங்களை வெற்றிகொண்டது.

**முதல் கூட்டத்தின் செயன்முறைகள்**

பொதுத் தேர்தலின் பின்னர் முதன்முறையாக சபை கூடும் நாளன்று, நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தின் ஏற்பாட்டின் பிரகாரம், உறுப்பினர்கள் உரிய நேரத்தில் கூடி, தங்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்வர்.

1. நாடாளுமன்ற அமர்வைக் கூட்டுவதற்கான ஜனாதிபதியின் பிரகடனத்தை, செயலாளர் நாயகம் வாசிப்பார்.

2. **சபாநாயகர் தெரிவு**
போதிய கோரம் இருக்குமாயின், முதலாவது கூட்டத்திலேயே, சபாநாயகரை நாடாளுமன்றம் தெரிவு செய்யும்.
சபாநாயகராக முன்மொழியப்படுபவரின் சம்மதத்தை, அங்கத்தவர் முதலிலேயே உறுதிப்படுத்த வேண்டும்.

3. சபாநாயகர் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்வர்.
சத்தியப்பிரமாணம் செய்யாத உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் அமரவோ வாக்களிக்கவோ முடியாது.

“....ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை, உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும் இலங்கையின் ஆட்புலத்துக்குள்ளாக தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு, நேரடியாகவோ மறைமுகமாகவோ, நிதி உதவவோ, ஊக்குவிக்கவோ, என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன்: சத்தியம் செய்கின்றேன்.”


4. நாடாளுமன்றத்துக்குத் தெரிவான உறுப்பினர்கள், பதவிப்பிரமாணம் செய்த பின்னர், கட்சித் தலைவர்கள் சிறிய உரையாற்றுவர்.

5. பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித்தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவர்.

6. இந்த விடயங்கள் முடிவுக்குவர, நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்படும். இதற்கான காலம், நேரம் என்பன, சபையால் தீர்மானிக்கப்படும்.

**நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சுகாதார வழிகாட்டல்கள்**

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான, கொவிட் - 19 சுகாதார வழிகாட்டல்கள், ஜூலை 31ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வழிகாட்டல்களை, சகல உறுப்பினர்களும் பின்பற்றவேண்டும். குழுக்கூட்டங்களின் போதும் பின்பற்றவேண்டும்.




- நுழைவாயிலிலேயே உடல் வெப்பநிலை அளக்கப்படும்.
- சபைக்குள் நுழைய முன், கிருமி தொற்றுநீக்கியைக் கொண்டு, கைகளை நன்றாகக் கழுவவேண்டும்.
- ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் மட்டுமே உறுப்பினர்கள் அமரவேண்டும்.
- சபைக்குள் உறுப்பினர்கள் கடந்து செல்வதை, ஆகவும் குறைத்துக்கொள்ள வேண்டும்.
- சபைக்குள் இரண்டு உறுப்பினர்கள், தங்களுக்கு இடையிலான தூரத்தை ஒரு மீற்றர் இடைவெளியில் பேணவேண்டும்.
- சபைக்குள் எந்நேரமும் முகக் கவசத்தை அணிந்திருத்தல் வேண்டும். அதனைக் கழற்றவோ கீழே இறக்கவோ கூடாது. உரையாற்றும் போதும் அதனை பின்பற்ற வேண்டும்.
- கட்டியணைத்து ஆறத்தழுவுதல், கைலாகு கொடுத்தல் கூடாது. வணக்கம் செலுத்தி ஒருவரையொருவர் வரவேற்கலாம்.
- சொந்த உபகரணங்களான, கையடக்கச் சாதனங்கள் (Mobile devices), செவிப்பண்ணி, பேனையை பகிர்ந்துகொள்வதைத் தவிர்த்தல்.

SLPP: ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன SJB: ஐக்கிய மக்கள் சக்தி, TNA: தமிழ்த் தேசிய கூட்டமைப்பு , JJB: தேசிய மக்கள் சக்தி, EPDP: ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, AITC: அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், TMVP: தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், SLFP: ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, MNA: முஸ்லிம் தேசிய முன்னணி, TMTK: தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, ACMC: அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், NC: தேசிய காங்கிரஸ், SLMC: ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், UNP: ஐக்கிய தேசிய கட்சி, OPPP: எங்கள் சக்தி மக்கள் கட்சி.

BY PRADEEP JAYAKODY ©TM GraphicDesk

# 19 ஐ திருத்த அனுமதி

### 20ஆவது சட்ட வரைபுக்கு அங்கிகாரம்; ஐவர் கொண்ட அமைச்சரவை துணைக்குழு



அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தைத் திருத்துவதற்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று 19ஆம் திகதி கூடிய முதலாவது அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதுடன், 20ஆவது சட்டவரைபைத் தயாரிப்பதற்கு அங்கிகாரமளித்துள்ளது.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம், ஜனாதிபதி செயலகத்தில், நேற்று (19) நடைபெற்றது. இதில், அரசமைப்பில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தம், அடுத்த ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதிக்குரிய செலவுகளை ஈடுசெய்வதற்கான முறைமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி வரும்போது

## வேட்டுகள் தீர்க்கப்படாது: வாகனங்கள் அணிவகுக்காது

### 3 மணிக்கு உரை: கலாசார நடனமாடி வரவேற்பர்



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்படும். அதன்பின்னர், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை அவர் நிகழ்த்துவார்.

தொடர்ச்சி P2

## ‘13க்கு சேதாரம் ஏற்படாது’



அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தேவையற்ற குழப்பங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமாகக் கருத்துகள் வெளியிடப்பட்டு வருவதாக விசனம் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவ்வாறான நோக்கங்கள் எதுவும் புதிய அரசாங்கத்துக்குக் கிடையாது என்றார்.

“அத்துடன், உண்மைக்குப் புறம்பான கருத்துகளை வெளியிட்டு, மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பங்களை யாரும் மேற்கொள்ள வேண்டாம்” எனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

# சபாநாயகர் யாப்பா: பிரதி சபாநாயகர் ரஞ்சித்




ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நியமிப்பதற்கு, ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, பிரதி சபாநாயகராக, கேகாலை மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை நியமிப்பதற்கும்

தொடர்ச்சி P2

10,000 பேருக்கு வேலைவாய்ப்பு:

## ‘வெயிலிலே காயாமல் வீட்டுக்குச் செல்லுங்கள்’

### பல்வியமாய் கூறி அனுப்பினார் ஜனாதிபதி



கொழும்பு, கோட்டை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் வேலையற்ற பட்டதாரிகள், நேற்று (19) நண்பகல் கடும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலாவது அமைச்சரவைக் கூட்டமும் ஜனாதிபதி செயலகத்தில், நேற்றுக் காலை 9.30 மணிமுதல் ஆரம்பமாகி, நடைபெற்றது. அமைச்சரவைக் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர்,

தொடர்ச்சி P2

புறப்பட்ட பிள்ளையான்

## வெலிக்கடையில் இரவைக் கழித்தார்

### சொக்கா மல்லியும் வருகிறார்

வ. சக்தி, கே.எல்.ரி. யுதாஜித்



நீண்ட நாள்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட, பிள்ளையான்’ என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், கொழும்புக்கு நேற்று (19) அழைத்துவரப்பட்டார்.

இன்றைய முதலாவது நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்கான அனுமதியை, மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் (18) வழங்கியிருந்தது. அதனடிப்படையில், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து நேற்றுக்காலை அழைத்துவரப்பட்டார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிறைச்சாலையில் இருந்த வண்ணமே,

தொடர்ச்சி P2

## ஐ.தே.கட்சி இன்றி முதலமர்வு கூடுகிறது

### இரண்டு ஆசனங்கள் வெற்றிடமாய் இருக்கும்

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரை உருவாக்கிய ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இன்றி, புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு, இன்று (20) கூடுகிறது.

இம்முறை பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி, எந்தவோர் ஆசனத்தையும் வெல்லவில்லை. எனினும், அக்கட்சிக்கு ஒரேயொரு தேசியபட்டியல் நியமனம் கிடைத்தது. அதற்காக,

தொடர்ச்சி P2

ரூ.60 ஆயிரம் இலஞ்சம்;

## இ.போ.ச முகாமையாளருக்கு விளக்கமறியல்

எஸ். றொசேரியன் லெம்பேட்

இலங்கை போக்குவரத்துச் சபையின், வட பிராந்திய முகாமையாளர், 60 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாகப் பெற்றபோது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால் மன்னாரில் வைத்து, நேற்று (19) காலை கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மன்னார் போக்குவரத்து டிப்போவுக்கு பின் பகுதியில் வைத்து, இலஞ்சம் பெற்ற போது, அதிரடியாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார். முறைப்பாடு ஒன்றை,

தொடர்ச்சி P2

## சகல பாடசாலைகளையும் மீள ஆரம்பிக்கத் தீர்மானம்

கொரோனா வைரஸ் வியாபித்தமையால் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் சகல பாடசாலைகளையும் மீளவும் ஆரம்பித்து, கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில், அவதானம் செலுத்தப்பட்டுள்ளதென, கல்வியமைச்சு அறிவித்துள்ளது.


வகுப்பறைகளில் வசதிகள் இருந்தால், சமூக விலகல் விதிமுறைகளை அமல்படுத்த முடிந்தால், பாடசாலைகளை

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# 19 ஐ திருத்த அனுமதி



நேற்றைய முதலாவது கூட்டத்தில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் சகலரும் பங்கேற்றிருந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அமைச்சரவைக்குள் புதிதாக உள்வாங்கப்பட்ட அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ, உதய கம்மன்பில, அலி சப்ரி ஆகியோருக்கு அமைச்சரவை, வாழ்த்துகளைத் தெரிவித்துகொண்டதென அறியமுடிகின்றது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குவது தொடர்பான பத்திரமொன்று, அமைச்சரவைக்குக் கையளிக்கப்பட்டது" என, நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இதேவேளை, 2020ஆம் ஆண்டுக்கான மீதமுள்ள மாதங்களுக்கான அரச நிதியை ஒதுக்கும் இடைக்காலக் கணக்கறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் நேற்றைய அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இந்நிலையில், அரசமைப்பைத் தயாரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, அமைச்சரவை துணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதில், அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா, அலி சப்ரி, தினேஸ் குணவர்தன, உதய கம்மன்பில ஆகியோர் அடங்குகின்றனர்.

# '13க்கு சேதாரம் ஏற்படாது'

19ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த, அரசாங்கம் முயற்சிப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் இந்தியாவின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தையும் இல்லாமல் செய்வதற்கு, புதிய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகச் சில தரப்புகளால் கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்ற நிலையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**“ புதிய அரசாங்கம் தொடர்பில், தமிழ் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் குறுகிய நலன் கொண்ட அரசியல் தரப்புகளே, இவ்வாறான உண்மைக்குப் புறம்பான கருத்துகளைப் பரவ விடுகின்றன**

“புதிய அரசாங்கம் தொடர்பில், தமிழ் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி, அதனூடாக அரசியல் நலன்களை அடைந்து கொள்ள முயற்சிக்கும் குறுகிய நலன் கொண்ட அரசியல் தரப்புகளே, இவ்வாறான உண்மைக்குப் புறம்பான கருத்துகளைப் பரவ விடுகின்றன” எனக் குற்றஞ்சாட்டினார்.

மேலும், இவ்வாறான அடிப்படையற்ற கருத்துகள் தொடர்பில் மக்கள் பதற்றமடையத் தேவையில்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஐ.தே.கட்சி இன்றி முதலமர்வு கூடுகிறது

**“ 1946 செப்டெம்பர் 6ஆம் திகதி ஐ.தே.க உருவாக்கப்பட்டது. டீ.எஸ். சேனாநாயக்கவின் தலைமையில், அக்கட்சி 1947ஆம் ஆண்டு முதன்முறையாகப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. அன்றிருந்த 95 ஆசனங்களில் 42 ஆசனங்களை வென்று ஆட்சியமைத்தது**

உத்தியோகபூர்வமாக எவரது பெயரும் இதுவரையிலும் பரிந்துரைக்கப்பட்டு, தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

லங்கா தேசிய சங்கம், சிங்கள மகா சபை, முஸ்லிம் சங்கம் ஆகியன இணைந்தே, 1946 செப்டெம்பர் 6ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சி உருவாக்கப்பட்டது. டீ.எஸ். சேனாநாயக்கவின் தலைமையில், அக்கட்சி 1947ஆம் ஆண்டு முதன்முறையாகப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. அன்றிருந்த 95 ஆசனங்களில் 42 ஆசனங்களை வென்று ஆட்சியமைத்தது.

அவ்வாறான வரலாற்றைக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து, ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குத் தேர்தலின் ஊடாக ஒருவரேனும் தெரிவு செய்யப்படவில்லை. எனினும், ஒரு தேசியபட்டியலுக்கு இடம் கிடைத்துள்ளது.

இதேவேளை, எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு, தேசியபட்டியலின் ஊடாகக் கிடைத்துள்ள ஆசனமும் நேற்றுவரையிலும் நிரப்பப்படவில்லை.

“அவ்விரண்டு ஆசனங்களுக்கு உரியவர்களின் பெயர்கள், வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்படாமையால், அவ்விருவரின் ஆசனங்களும் இன்று (20) வெற்றிடமாக இருக்கும்” என, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

# வேட்டுகள் தீர்க்கப்படாது: வாகனங்கள் அணிவகுக்காது



முதலாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைப்பதற்காக, ஜனாதிபதி வருகைதரும்போது, மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டு, வாகன அணிவகுப்பு இடம்பெறும். இம்முறை அவையாவும் இடம்பெறாது. ஜனாதிபதியை வரவேற்கும் முகமாக, நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் முப்படையினரின் பங்களிப்புடனான கலாசார நடனம் இடம்பெறும்.

முதலில், பிற்பகல் 2.15க்கு விருந்தினர்களின் வருகை இடம்பெறும். அதன்பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகைதருவர், சபாநாயகர் வருகையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வருகையும் இடம்பெறும்.

அதன்பின்னர், ஜனாதிபதி சபைக்குள் அழைத்துச் செல்லப்படுவார். இதன்போது நாடாளுமன்றத்தின் பிரதான வாயிலின் அருகில், கொழும்பு தேவி பாலிகா வித்தியாலய மாணவியரால் ஜயமங்கள கீதம் இசைக்கப்படும்.

# சபாநாயகர் யாப்பா: பிரதி சபாநாயகர் ரஞ்சித்

ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரிமாளிகையில் நேற்று (19) மாலை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இ.போ.ச முகாமையாளருக்கு விளக்கமறியல்

சீர்செய்யும் நோக்கிலேயே, 60 ஆயிரம் ரூபாயை பிராந்திய முகாமையாளர் இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுவின் அதிகாரிகள், மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். ஆணைக்குழுவின் சார்பில் ஆஜராகியிருந்த அதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதவான் எம்.கணேசராஜா, சந்தேகநபரை ஓகஸ்ட் 27ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், சிறைச்சாலை அதிகாரிகளின் ஊடாக, அன்றையதினம் (ஓகஸ்ட் 27) கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார்.

# 'வெயிலிலே காயாமல் வீட்டுக்குச் செல்லுங்கள்'



தனது வாகனத்தில் சென்றுகொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட, பட்டதாரிகளுடன் வாகனத்தில் இருந்தவாறே உரையாடினார்.

இதன்போது, ஜனாதிபதிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கேள்வி பதில்களுடன் கூடிய சுவாரஸ்யமான சம்பாஷனையும் இடம்பெற்றது.

ஜனாதிபதி: இன்று (நேற்று) கூடிய முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலே யே 10ஆயிரம் பேருக்கு (வேலையற்ற பட்டதாரிகளுக்கு) வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகரித்தது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர்: எங்களுக்கு 45 வயதுக்கு மேல் ஆகிறது சேர்.

ஜனாதிபதி: 45 வயதுக்கு மேற்பட்டவர்கள், இதுவரையிலும் என்ன செய்தீர்கள்?

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர்: எட்டு வருடங்கள் நாங்கள் வீட்டில் இருந்தோம்; கடந்த ஆட்சியிலேயே எங்களுடைய வயது சென்றுவிட்டது. எங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவில்லை சேர்.

ஜனாதிபதி: சரி, சரி நாங்களும் வேலை செய்திருக்கின்றோம். (ஆர்ப்பாட்டக்கார்களில் ஒருவரைப் பார்த்து) உங்களுக்கு 45 வயதாக இருக்கமுடியாது?

அந்த ஆர்ப்பாட்டக்காரர்: எனக்கு 38 வயதாகிறது சேர்.

ஜனாதிபதி: அப்படியாயின் என்ன பிரச்சினை

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர்: எங்களுடைய பெயர் வெட்டப்பட்டுள்ளது சேர். ஜனாதிபதி: அச்சப்படாதீர்கள்! எல் லோருக்கும் வேலைவாய்ப்புத் தருவேன். மேலும், 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்தது. ஆகையால், வெயிலிலே காயாமல் எல்லோரும் வீட்டுகளுக்குச் செல்லுங்கள்.

ஜனாதிபதி இவ்வாறு கூறிவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களும் சில நிமிடங்களில், தங்களுடைய ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுவிட்டு, அங்கிருந்து கலைந்துசென்றுவிட்டனர்.

# சகல பாடசாலைகளையும் மீள ஆரம்பிக்கத் தீர்மானம்

முழுமையாகத் திறக்க முடியுமென அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளில் முழு மாணவர்களின் எண்ணிக்கை 200க்கும் மேற்பட்டதாக இருந்தாலும் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி, மாணவர்களுக்கு இடையே சமூக இடைவெளியைப் பேணமுடியுமாயின் பாடசாலைகளைத் திறக்கமுடியுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

விடுமுறை வழங்கப்பட்டு, மூடப்பட்டிருக்கும் அரச பாடசாலைகள், அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் ஆகியவற்றை இவ்வாறு ஆரம்பிக்க முடியுமென, கல்வியமைச்சு அறிவித்துள்ளது.



# வெலிக்கடையில் இரவைக் கழித்தார்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிட்டு, 54,198 விருப்பு வாக்குகளைப் பெற்று அவர், நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில், சந்தேகத்தின் பேரில் 2015ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட, அவர், தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து அழைத்துவரப்பட்ட அவர், வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில், நேற்று முழுவதும் தங்கவைக்கப்பட்டு, நாடாளுமன்றத்தின் முதல் அமர்வுக்காக, இன்று (20) காலை, அழைத்துச் செல்லப்படுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மனித படுகொலை குற்றச்சாட்டில், இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் குற்றவாளியாக இனங்காணப்பட்ட, 'சொக்கா மல்லி' என்றழைக்கப்படும் பிரேமலால் ஜயசேகரவும், நாடாளுமன்றத்துக்கு அழைத்துவரப்படவுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிட்டிருந்த நிலையில், தேர்தல் பிரசாரக் காலத்திலேயே அவருக்கு, மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும், அத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அவர் மேன்முறையீடு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை இணை பேச்சாளர்கள் நியமனம்



புதிய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளராக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வல நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், அமைச்சரவை இணைப் பேச்சாளர்களாக அமைச்சர்களான உதய கம்மன்பில, ரமேஷ் பத்தரண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று (19) நடைபெற்றது. இதன்போதே, மேற்கண்ட நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# ரணவக்கவுக்கு முன் பிணை



நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட முன் பிணையின் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை விடுதலை செய்ய, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க நேற்று (19) உத்தரவிட்டுள்ளார்.

இராஜகிரிய பகுதியில் 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி சந்தீப் சம்பத் குணவர்தன என்பவரை விபத்துக்கு உள்ளாக்கியமை தொடர்பில் சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று (19) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, மேற்கண்டவாறு நீதிபதி உத்தரவைப் பிறப்பித்தார்.

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவரையும் இன்றைய தினம் (20) நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, ஏற்கெனவே, அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், சம்பிக்க ரணவக்க சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் முன்னகர்த்தல் மனுவை, நேற்று (19) தாக்கல் செய்து, நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டம், நாளை (இன்று) நடைபெறவிருப்பதால், நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்காக, பிரிதொரு திகதியைக் குறித்தொதுக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்நிலையிலேயே ஓகஸ்ட் 28ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# 1/4 போத்தல் சாராயம், ஒற்றை சிகரெட் விற்பனை நிறுத்தம்?



180 மில்லி லீற்றர் சாராய விற்பனை (1/4 போத்தல்) மற்றும் தனியொரு சிகரெட்டை விற்பனைச் செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை நிறுத்துவதற்காக, புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த உள்ளதாக, புகையிலை, மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல வோடர்ஸ் ஏஜ் ஹோட்டலில், நேற்று முன்தினம் (18) நடைபெற்ற செயலமர்வொன்றில் கலந்துகொண்டு விரிவுரை ஆற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், கால் போத்தல் சாராய விற்பனையால் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு உள்ளதெனத் தெரிவித்தார். அத்தோடு, தனி சிகரெட் விற்பனையைத் தடை செய்வதற்கான சட்டமூலத்தை, 2019ஆம் ஆண்டில் இரு தடவைகள் அமைச்சரவையில் சமர்பித்திருந்த போதும், அதற்கு அனுமதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்த அவர், அடுத்த வாரம் மீண்டும் அந்த சட்டமூலத்தை அமைச்சரவையில் சமர்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் வெற்றிலைக் கூறுகளை விற்பனை செய்வது, முழுமையாக தடைச் செய்யப்பட்டுள்ள போதும், அதனைக் கருத்திற்கொள்ளாத நிலையே காணப்படுவதாகத் தெரிவித்த அவர், எதிர்வரும் நாள்களில், அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் சிகரெட், மதுபான வகைகளை விற்பனை செய்வதால் பெறப்படும் வரி வருமானத்தை, அவற்றின் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கே செலவிட நேரிட்டுள்ளதெனவும் அது தொடர்பாக அவதானம் செலுத்திய பின்னரே, சிகரெட், மதுபான உற்பத்தி தொடர்பானச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மஹிந்தானந்தவுக்கு எதிரான

## நிதி மோசடி குறித்த வழக்கு ஒத்திவைப்பு



அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில், நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்ட மா அதிபர் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சிகள் மீதான விசாரணை, ஒக்டோபர் 5ஆம் திகதி வரை ஒத்திவைத்து, உயர்நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாரச்சி நேற்று (19) உத்தரவிட்டார்.

அமைச்சராக இருந்த போது, 25 மில்லியன் ரூபாய்க்கும் அதிக செலவில், கொழும்பு - கின்சி வீதியில் வீடு ஒன்றைக் கொள்வனவு செய்தமை ஊடாக, நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்தாகக் கூறி, சட்ட மா அதிபரால், மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நேற்று (19) நடந்த போதிலும், பிரதிவாதி மஹிந்தானந்த அளுத்கமகே, மன்றத்தில் ஆஜராகவில்லை. அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள இருப்பதாலேயே அவர் மன்றில் ஆஜராகவில்லை என, அவர் சார்பில் மன்றில் சட்டத்தரணி அறிவித்த நிலையிலேயே, மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அரச வங்கிகளில் இடம்பெற்ற

## மோசடிகளை ஆராய புதிய குழு நியமனம்

கடந்த ஐந்து வருடக் காலப்பகுதியில், அரச வங்கிகளுக்குள் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள், பயனற்ற விதத்திலான செயற்பாடுகள், கொள்கைக்கு முரணான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்துப் பார்ப்பதற்காக, நால்வர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவை நிறுவுவதற்கு அனுமதி கோரி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் சமர்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு, அனுமதி கிடைத்துள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக, மேல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் சிசிர ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளதோடு, 3 மாதங்களுக்குள் அந்தக் குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைச் சமர்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## அதிரடிப்படைக்கு அழைப்பு

இலங்கை மின்சார சபையின் கட்டுப்பாட்டு அலகைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு, அமைச்சர் டலஸ் அலஹப்பெரும பணித்துள்ளார்.

அண்மையில், முழு நாட்டிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருந்த நிலையில், மின்சார சபையின் கட்டுப்பாட்டு அலகை மேற்பார்வை செய்த அமைச்சர், மேற்கண்ட பணிப்புரையை விடுத்துள்ளார். முழு நாட்டுக்குமான மின் விநியோகச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அலகை, தொடர்ச்சியாக பாதுகாப்பதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், அதனைப் பாதுகாக்கும் அதிகாரிகளுடன், விஷேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பையும் பெற்றுக்கொள்வது தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்வுக்கு அறிவித்துள்ளார்.

# ‘19ஐ ஒரே நாளில் நீக்கிவிட முடியாது’

## இன்றைய அமர்வுக்கு எம்.பியுடன் ஒருவர் மட்டுமே வரலாம்



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சில ஆசனங்கள் வெறுமையாகக் காணப்படுவதால், நாடாளுமன்ற கடமைகளை முன்னெடுத்துச் செல்வதில் தடை ஏற்படாதெனத் தெரிவித்த நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாள் தொகுதியின் பிரதானியுமான நீல் இத்தவல, இன்றைய (20) நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்கவரும் எம்.பிக்கள், தம்முடன் ஒரு விருந்தினரை மாத்திரமே அழைத்துவர முடியுமென அறிவுறுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கூறிய அவர், நாடாளுமன்ற அமர்வின் முதல் நாளென்றே, அரசமைப்புத் திருத்தம் ஒன்றைச் செய்வதற்கான இயலுமை இல்லையெனவும் அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, குறைந்தபட்சம் 14 நாள்கள் அவசியமெனவும் தெரிவித்தார்.

அதேபோல், விவாதங்களை நடத்தாமல் அரசமைப்புத் திருத்தங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாதென தெரிவித்த அவர், அரசமைப்பின் 19ஆவது திருத்தம் உள்ளிட்ட எந்தவொரு திருத்தத்தையும், ஒரேநாளில் நீக்கிவிட முடியாதெனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்குப் புதிதாகத் தெரிவான 81 எம்.பிக்களே உள்ளனர் எனத் தெரிவித்த அவர், அவர்களைத் தவிர்ந்த மற்றைய உறுப்பினர்கள் சகலருடைய கைரேகைப் பதிவுகளும், நாடாளுமன்றத்தில் உள்ளனவெனவும் தெரிவித்தார். இன்றைய தினம், புதியவர்களுடைய கைரேகைப் பதிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு உள்ளனவெனத் தெரிவித்த அவர், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, முதல் அமர்வு தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இதுவரையில் நாடாளுமன்றத்தை பிரதிநித்துவப்படுத்திய முன்னாள் எம்.பிக்கள் 465 பேர், ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்கின்றனர் என்றும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் இல்லாத பட்சத்தில், அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை நாடாளுமன்றத்துக்கு இல்லையென்றும் தெரிவித்தார்.

அத்தோடு, 1,870 தொடக்கமான புத்தகங்கள் நாடாளுமன்றத்தில் உள்ளனவெனவும், அவற்றிலுள்ள 35 மில்லியன் பக்கங்களும், டிஜிட்டல் முறையில் வடிவமைக்கப்பட்டு உள்ளனவெனவும் தெரிவித்தார். அதேபோல், நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கான அனுமதி பெரும் முறைகள் இலகுபடுத்தபட்டுள்ளன என்றும் கொவிட் - 19 அச்சுறுத்தல் முடிந்தவுடன், நாடாளுமன்ற வெளிக்கள அலுவலகத்தை தொடர்புகொண்டு அனுமதிகளைப் பெற்று, நாடாளுமன்றத்தைப் பார்வையிடலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஐயாயிரம் புலைமை பரீசில்கள் வழங்கல்

பா.நிரோஸ்

கனேடிய பொதுநலவாய கற்கைகள் சங்கத்தின் புலைமைப் பரிசில்களை, 5,000 இலங்கையர்களுக்கு வழங்கவுள்ளதாக, அந்தச் சங்கத்தின் தலைவர் செனாலா குணவர்தன தெரிவித்தார்.

தேசிய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று (19) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு மேலும் கருத்தரைத்த அவர், கொவிட் - 19 பரவல் காரணமாக, உலகலாவிய ரீதியில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் 1.6 பில்லியனுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், உலக நாடுகளில் பொருளாதார நிலைமைகளும் பாதிப்படைந்து உள்ளதெனவும் அதனால், இணையம் மூலமான கல்வி முறைகள் வேகமாக வளர்ந்து வருகின்றதெனவும் தெரிவித்தார். அதன்படி, தேசிய நூலகம், ஆவணமாக்கல் திணைக்களத்தின் கீழ், கனேடியப் பொதுநலவாய கற்கைகள் சங்கத்தின் உதவியுடன், 3,800 கற்கை நெறிகளை பணம் செலுத்தாமல் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு

## ‘மீண்டுமொரு வாய்ப்பு’



அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்துக்கு விண்ணப்பித்திருந்த போதிலும், நியமனங்கள் கிடைக்காதவர்கள் மேன்முறையீடு செய்யும் பட்சத்தில், மீண்டுமொரு சந்தர்ப்பத்தை வழங்க முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளாரென, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், வறுமைப்பட்ட குடும்பங்களின் வாழ்வதாரத்தை உயர்த்தும் வகையில், ஒரு இலட்சம் அரசாங்க வேலைவாய்ப்புகள் விரைவில் வழங்கி வைக்கப்படும் என்று, ஜனாதிபதி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார் எனவும், அமைச்சர் தெரிவித்தார். புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை, நேற்று (19) நடைபெற்ற நிலையில், அதில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே,கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். குறித்த வேலைவாய்ப்புகளுக்கு, நாடளாவிய ரீதியில் வறுமைப்பட்ட குடும்பங்களில் இருந்து சுமார் ஒரு இலட்சம் பேர் உள்வாங்கப்படவுள்ளதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், சுமார் 700 பேரை சிபாரிசு செய்வதன் ஊடாக, சரியானவர்களுக்கு குறித்த வேலை வாய்ப்புகள் கிடைப்பதை உறுதிப்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி எதிர்பார்ப்பதாக, அமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள்

# ‘வீடுகளுக்குள்ளேயே இடம்பெறுகின்றன’

சிறுவர்களின் பாதுகாப்பு விடயத்தில், பெற்றோர்கள் பொறுப்புத் துறந்துச் செயற்படும் நிலைமை அதிகரித்துள்ளதெனத் தெரிவித்த சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரோயகத் தடுப்புச் செயலணியின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பிம்ஷானி ஜாசிங்கஆரச்சி, வீட்டுக்குள்ளேயே சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்றனர் எனவும் தெரிவித்தார்.

ஆழ்க்கடலில் வைத்து, 48 நாள்களாகச் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட மாத்தறை - மிரிஸ்ஸ பகுதியைச் சேர்ந்த சிறுவனை, நேற்று நேரில் சென்று பார்வையிட்டதாகவும் அந்தச் சிறுவனது குடும்பத்தின் வறுமை காரணமாகத்தான், அவன் கடற்றொழிலுக்குச் சென்றுள்ளான் என்றும், அவர் தெரிவித்தார்.

குறித்த சிறுவன் செய்த சிறு தவறு காரணமாகத்தான், கடுமையான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டுள்ளான் என்றும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடை ஐவரை, பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் நேற்று (19) ஆஜர்படுத்திய போது, ஐவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதிவரையில் விளக்கமறியிடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் கூறினார்.

இது போன்ற சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் குறித்து முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளில், 13- 16 வயது வரையான பெண் பிள்ளைகள், அதிகளவில் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளன எனவும் ஆண் பிள்ளைகள் மீதான துஷ்பிரயோகச் செயற்பாடுகளும் அதிகரிப்பை காட்டுகின்றர் எனவும் கூறிய அவர், த்தொழில்நுட்பத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகச் செயற்பாடுகளும் அதிகளவில் பதிவாகி வருவதாகவும் கூறினார்.



சொந்த வீடுகளுக்குள்ளேயே அதிகளவில் சிறுவர்கள் பாதிக்கப்படுவதோடு, தாய், தந்தை இருவரும் இருக்கும் பிள்ளைகளே, இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு ஆளாவது கவலைக்குரியதெனவும் தெரிவித்தார்.

மின்சார பிரச்சினை;

## ‘வார இறுதியில் தீர்வு கிடைக்கும்’

இந்த வார இறுதியில், மின்சாரப் பிரச்சினைக்கான தீர்வை வழங்கவுள்ளதாக, இலங்கை மின்சார சபையில் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்தார். நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டதாலேயே, இந்தப் பிரச்சினை எழுந்துள்ளதென்றும் அவர் கூறினார்.

இந்நிலையைச் சீர்செய்வதற்காக, செவ்வாய்க்கிழமை (18) முதல், தொடர்ந்து 4 நாள்களுக்கு, ஒரு மணித்தியால மின் வெட்டை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், எவ்வாறாயினும், மின் வழங்கல் போதுமாக இருந்தமையால், சில பகுதிகளில் நேற்று முன்தினம் (18) மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லையெனவும் கூறினார். குறுகிய காலத்துக்குள் அனல் மின் நிலையத்தின் செயற்பாட்டை வழமைக்குக் கொண்டு வருவது கடினமெனவும் நாளை (21) அல்லது சனிக்கிழமையன்று, நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் செயற்பாட்டை வழமைக்குக் கொண்டுவர முடியுமென்றும், விஜித்த ஹேரத் தெரிவித்தார்.


வாடகைக்கு

வாடகைக்கு
இரத்மலான ஸ்ரீ தர்மராம வீதி வளவாவத்தவில்,
அறையொன்று வாடகைக்கு உண்டு 0763750995

பொது அறிவிப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு இன் படி பின்வரும் நிறுவனம் 2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி அன்று கூட்டிணைக்கப்பட்டது என்று அறிவிப்பு வழங்கப்பட்டடுள்ளது.

நிறுவனத்தின் பெயர் : சீ சீ சீ ரெசிடென்சஸ் மெனேஜ்மென்ட் கோர்பரேஷன் (பீவீட) எல்டீடி

நிறுவனத்தின் இல : பி – வீ 00225930

பதிவு செய்யப்பட்ட முகவரி :
இல. 137, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு – 2

ஜேசீ என்ட் கம்பனி
கம்பனி செயலாளர்கள்
இல. 9/5, தம்பியா எவன்யு, கொழும்பு – 07.

அடோர்னி தத்துவ இரத்துச் செய்தல்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசில் அங்கொட, கொட்டிகாவத்த, இல. 397/09 எனும் இடத்தில் குடியிருக்கும் மற்றும் தேசிய அடையாள அட்டை இல. 552422481V கொண்ட குருப்பு ஆராச்சிகே ரூபசிங்க ஆனந்த லால் ஆகிய நான் 2018 நவம்பர் மாதம் நான்காம் திகதி கொழும்பில் பிரசித்த நொத்தாரிசு திருமதி. மஞ்சுளா நிஷாந்தி ரூபசிங்க அவர்களாள் எழுதி உறுதி செய்யப்பட்டதும் பதிவாளர் நாயக திணைக்களத்தின் பத்தரமுல்லை வட்டார அலுவலகத்தில் எழுத்து மூலமாக மற்றும் அற்றோனித் தத்துவ ஆவணத்தில் 256 ஆம் அத்தியாயத்தில் 14 ஆம் பதிவேட்டில் 20113 ஆம் தினக்குறிப்பேட்டின் கீழ் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி எழுதி பதிவுசெய்யப்பட்டதுமான அடோர்னி தத்துவ பத்திர இல. 1754 என்ற அடோர்னி தத்துவ பத்திரம் மூலம் அங்கொட, கொட்டிகாவத்த, இல. 397/09 என்ற இடத்தில் குடியிருக்கும் மற்றும் தேசிய அடையாள அட்டை இல. 926720384V கொண்ட கத்யா பவித்ரிகா குருப்பு என்பவருக்கு வழங்கப்பட்ட அடோர்னி தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக ரத்துச்செய்கிறேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சட்டங்களுக்குள் முடங்கி கைத்தொழில்கள் வீழ்ச்சியடைவதற்கு

# ‘இடமளிக்க முடியாது’

சட்டதிட்டங்களுக்குள் முடங்கி, பாரம்பரியக் கைத்தொழில்கள் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்க முடியாதென, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாரம்பரியக் கைத்தொழில்கள் குறித்த கரிசனையற்ற சட்டங்களை ஆக்குவதன் மூலம், கைத்தொழிற்றுறையும் சுதேச கைத்தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையும் வீழ்ச்சிடைந்திருப்பதாகவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பிரம்பு, பித்தளை, மட்பாண்டம், மரப்பாண்டம், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டம் தொடர்பாக, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தவறு செய்யும் சிறு பிரிவினர் காரணமாக, சட்ட ரீதியாகக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிப்படைவதற்கு இடமளிக்கக் கூடாதென்றார்.



சுதேச கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு, அதிகாரிகள் ஆக்கத்திறன் வாய்ந்த வகையில் செயற்படுவது அவசியம் எனத் தெரிவித்த அவர், அடிமட்டத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்து முக்கிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் கூறினார்.

அரசாங்கம் மேற்கொள்ளும் தீர்மானங்கள், கீழ் மட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பது பற்றி ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகுமெனத் தெரிவித்த ஜனாதிபதி, நீண்டகாலமாக உரிய கவனம் செலுத்தப்படாதிருக்கும் பாரம்பரிய கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வது திட்டமிட்ட வகையில் செய்யப்பட வேண்டுமென்றும் கூறினார்.

அத்துடன், விவசாயப் பெறுமதியற்ற தரிசு நிலங்களை, பிரம்பு போன்ற கைத்தொழில் துறைக்குத் தேவையானவற்றைப் பயிரிடுவதற்காகப் பயன்படுத்த முடியும். ஊதுபத்தி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூங்கில் குச்சிகளை இறக்குமதி செய்வதற்கு, வருடாந்தம் அதிக பணம் செலவிடப்படுகின்றது. அவற்றை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதன் மூலம், வெளிநாடுகளுக்குச் செல்லும் நிதியை மீதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

அரச கள உத்தியோகத்தர்களுக்கு

## மோட்டார் சைக்கிளை வழங்குமாறு கோரிக்கை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்ட அரச கள உத்தியோகத்தர்களுக்கு, சலுகை அடிப்படையில் வழங்கப்படாத மோட்டார் சைக்கிளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் செயலாளர் எஸ். ஆப்தீன் தெரிவித்தார்.



இது தொடர்பாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, நேற்று (19) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில், குறிப்பிடப்பட்டு உள்ளதாவது, “2014ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, மஹிந்த சிந்தனைத் திட்டத்தில், நாடளாவிய ரீதியில் அமல்படுத்தப்பட்ட கள உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்குவதாக முன்வைத்த யோசனைக்கமைய, சலுகை அடிப்படையிலான மோட்டார் சைக்கிளை வழங்குவதற்கு ஆவணம் செய்ய வேண்டும்” எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்கல் திட்டத்தின் போது, அம்பாறை மாவட்டத்திலுள்ள 5,650 கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும், அக்கடித்தில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

எனவே, அம்பாறை மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத வலையில் மீன்பிடி;

## மூன்று இயந்திர படகுகள் மீட்பு

■ வா.கிருஸ்ணா



சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடத் தயார் நிலையிருந்த மூன்று இயந்திரப் படகுகளும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகளும், நேற்று (19) காலை மீட்கப்பட்டுள்ளன என்று, மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் ருக்ஷான் குரூஸ் தெரிவித்தார்.

மேற்படி திணைக்களத்தின் எல்லைக்குட்பட்ட நொச்சிமுனை பகுதியில், விசேட அதிரடிப்படையினர், கடற்படையினர், இராணுவத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, இவை மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுவளைப்பின் போது சுமார் 35 இலட்சம் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத வலைகள் மீட்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது, நாட்டில் தடைப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதாக மீனவர்கள் வழங்கும் முறைப்பாடுகளின் அடிப்படையில், இவ்வாறான மீன்பிடிகளைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள முன்னெடுத்து வருகின்றது.



## உலர்ந்த மஞ்சளுடன் நால்வர் கைதாகினர்

மன்னார் - வங்காலை, நுரைச்சோலை - தலுவ ஆகிய கடற்கரைகளின் ஊடாக, சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகை உலர்ந்த மஞ்சளுடன், கடற்படையினரால் நான்கு பேர், நேற்று முன்தினம் (18) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து, 807 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் பொதிகள் 14, இரண்டு டிங்கி ரக படகுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளனவென, கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள், 25 வயதுக்கும் 58 வயதுக்கும் இடைப்பட்டவர்களெனவும் இவர்கள், கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்களெனவும், விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மன்னார் - வங்காலை, நுரைச்சோலை - தலுவ ஆகிய கடற்கரைகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கைகளின் போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை, சின்னபாடு, யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று, கடற்படையினர் தெரிவித்தனர்.

கடந்த 3 வாரங்களில், கடற்படையினரால் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 8,245 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரு வீடுகள் தீக்கிரை

### மேலுமொரு வீடு விஷமிகளால் சேதம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பிரதேசத்தில், நேற்று முன்தினம் (18) இரவு 11 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, இரு வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. நாவற்குடா இசை நடனக் கல்லூரி வீதியின் 11ஆம் குறுக்கிலுள்ள இவ்வீடுகளே முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன. இந்த இரு வீடுகளில் பரவிய தீயை, மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான தீயணைப்புப் படையினர் கட்டுப்பாட்டுள்குள் கொண்டுவந்தனர். இதேவேளை, மேற்படி பிரதேசத்தில் அமைந்துள்ள மற்றொரு வீடு, இனந்தெரியாத நபர்களால் பாரியளவில் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும், காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயில் நிலையக் களஞ்சியத்தில் திருட்டு

■ எம்.றொசாந்த்

கோண்டாவில் ரயில் நிலையக் களஞ்சியத்தில் இருந்து, ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளனவென, கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம், நேற்று முன்தினம் (18) இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம், ரயில் திணைக்களப் பணியாளர்கள், களஞ்சியசாலையை பார்வையிட்ட போதே, அது உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டமையை அறிந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## துப்பாக்கி ரவைகள் மீட்பு

■ செந்தூரன் பிரதீபன்

மயிலிட்டி பகுதியில் உள்ள தனியார்க் காணி ஒன்றில் இருந்து, நேற்று (19), ஒரு தொகுதி துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளனவென, இராணுவத்தினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (18) மாலை, காணி உரிமையாளர் கனரக வாகனத்தின் உதவியுடன் காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்த போது, மண்ணுக்குள் புதையுண்ட நிலையில், டி-56 ரக துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குண்டு செயழிக்கும் பிரிவினருடன், நேற்று (19) அப்பகுதிக்கு விரைந்த இராணுவத்தினரும் பொலிஸாரும், இந்தத் துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர்.



பேராதனைப் பல்கலைக்கழக

## நூலகராக மகேஸ்வரன் நியமிக்கப்பட்டார்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 8ஆவது கல்விசார் நூலகராக, இராசையா மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.



இராசையா மகேஸ்வரன், 1984ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைகழகத்தின் மாணவராகச் சேர்ந்து, புவியியற்றுறையில் சிறப்புக் கற்கை நெறியில் பட்டதாரியானார். 1994ஆம் ஆண்டு கல்விசார் உதவி நூலகராக, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்தார். 2001ஆம் ஆண்டு கொழும்பு பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் நூலகத் தகவல் தொழில்நுட்ப முதுமானி பட்டத்தைப் பெற்று, கல்விசார் சிரேஷ்ட நூலகராகப் பதவி உயர்ந்தார்.

2007ஆம் ஆண்டு கல்விசார் முதுநிலை நூலகராகப் பதவிபெற்று, 2011ஆம் ஆண்டு இணைப் பேராசிரியருக்கு சமனான பிரதி நூலகராகப் பதவி உயர்வு பெற்றார். 2015 தொடக்கம் பதில் நூலகராக நூலகத்தைப் பொறுப்பேற்று, கடந்த ஐந்து வருடங்களாகக் கடமையாற்றி வந்தார்.

இவரது காலத்தில், 1960க்கு பின் சுமார் 57 வருடத்துக்குப் பின், புதிய கட்டடம் இணைய நூலகம், டிஜிட்டல் நூலகம் அரும்பொருட் காட்சியகம், ஓவியம், சிற்பம் மற்றும் ஓலைச்சுவடிகளுக்கான காட்சியறைகள் கொண்ட பல்வேறு சேவைகளுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகக் கட்டப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக நூலகம், யுனிவசிட்டி கல்லூரி 1921ஆம் ஆண்டு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட போது உருவாக்கப்பட்ட நூலகத்தின் நூல் சேர்க்கையைக் கொண்டுள்ளது. 2021ஆம் ஆண்டு, இந்நூலகத்துக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படவுள்ளது.

சதாசகாய மாதா திருவிழாவுக்கு

## நூறு பேருக்கே அனுமதி

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன், எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு - ஆயித்தியமலை, சதாசகாய மாதா திருவிழாவுக்கு, ஒரே நேரத்தில் நூறு பக்தர்களை மாத்திரமே தேவாலயத்துக்குள் அனுமதிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

விசேடமாக, மூன்று திருப்பலிகள் நடத்துவதற்கு, குரு முதல்வர்கள் தீர்மானித்துள்ள அதேவேளை, அன்னதானம், தண்ணீர்ப் பந்தல்கள், கடைகள், உணவகங்களுக்கான அனுமதிகள் மறுக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள திருவிழாவை முன்னிட்டு, மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜா தலைமையில், மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில், நேற்று முன்தினம் (18) கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

மாவட்டச் செயலக கிறிஸ்தவ மத அபிவிருத்தி உத்தியோகத்தர் ரேகா நிருபனின் ஒருங்கிணைப்பில், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் சங்கைக்குரிய கலாநிதி பொன்னையா ஜோசப், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில், கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான சுற்றுநிருபத்தின் அடிப்படை விடயங்களைப் பின்பற்றுமாறு, சுகாதாரத் திணைக்களத்தினர் வலியுறுத்தினர்.

அத்தோடு, பாதுகாப்புக்காக பொலிஸாரும் இராணுத்தினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்கும்போது, போத்தலில் அடைக்கப்பட்ட நீர் வழங்குவதாகவும், இக்கூட்டத்தில் தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

இந்த வருட இறுதிக்குள்

## நாட்டில் சேலைன் போத்தல் தொழிற்சாலை

நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 90 சதவீதமானவை, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகத் தெரிவித்த பொதுஜன பெரமுனவின் அநுராதபுர மாவட்ட தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஷன்ன ஜயசுமன, இந்த வருடம் நிறைவடைவதற்குள், நாட்டுக்குத் தேவையான சேலைன் போத்தல்களை, இந்நாட்டிலேயே தயாரிப்பதற்கான தொழிற்சாலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.



இது தொடர்பில் கருத்துரைத்த அவர், “பல மில்லியன் ரூபாய் செலவில், வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு சேலைன் போத்தல்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஒரு சேலைன் போத்தல்கூட இங்கு தயாரிக்கப்படுவது இல்லை. அதற்கான வசதிகள், இந்நாட்டில் இல்லை” என்றார்.

இது தொடர்பில், நேற்று முன்தினம் (18) பசில் ராஜபக்ஷவுடன் நடைபெற்ற முதலாவது கலந்துரையாடலில், தாம் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகத் தெரிவித்த அவர், “இந்த வருடம் நிறைவடைவதற்குள், எமது உற்பத்தியை நாட்டுக்கு வழங்குவோம்” என்றார்.

> **“ கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன், 5 வருடத் திட்டத்தில், வெளிநாடுகளிலிருந்து மருந்து இறக்குமதியை முழுமையாக நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். தற்போது அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன**

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன், 5 வருடத் திட்டத்தில், வெளிநாடுகளிலிருந்து மருந்து இறக்குமதியை முழுமையாக நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார் எனவும் தற்போது அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

கூலி வேலையில் ஈடுபட்டிருந்த

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (18) கூலி வேலையில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர், திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

புத்தூர் - கலைமதி கிராமத்தைச் சேர்ந்த உ.சதிஸ் (வயது 43) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே, இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சுன்னாகம் பகுதியில், கூலி வேலையில் ஈடுபட்டிருந்த இந்நபர், திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

இதையடுத்து அங்கிருந்தவர்கள் அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது, அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டாரென, வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மாலி

இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டதையடுத்து

# மாலி ஜனாதிபதி இராஜினாமா

மாலியில் கிளர்ச்சியை மேற்கொண்ட படைவீரர்கள் மாலி ஜனாதிபதி இப்ராஹிம் அபூபக்கர் கெய்ட்டாவை துப்பாக்கிமுனையில் தடுத்து வைத்த சில மணித்தியாலங்களில் அவர் நேற்று முன்தினம் இராஜினாமா செய்ததுடன், நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

அந்தவகையில், ஏற்கெனவே இஸ்லாமிய ஆயுததாரிகளையும், பாரிய ஆர்ப்பாட்டங்களையும் எதிர்கொள்கின்ற மாலி மேலும் நெருக்கடிக்குள் சென்றுள்ளது.

மாலிப் பிரதமர் பெளபெள சிஸே, ஜனாதிபதி இப்ராஹிம்பூஆபக்கரின் மகன், மாலி நாடாளுமன்ற சபாநாயகர், வெளிநாட்டமைச்சர், நிதியமைச்சருடன் ஜனாதிபதி இப்ராஹிம் அபூபக்கர் கெய்ட்டாவை படைகள் முற்றுகையிட்டதைத் தொடர்ந்து, மாலி அரச தொலைக்காட்சியில் குறிப்பிட்ட நேர ஒளிபரப்பில் களைத்திருந்த, சத்திரசிகிச்சை முகக்கவசமொன்றை அணிந்திருந்த அவர் இராஜினாமாச் செய்திருந்தார்.



மாலித் தலைநகர் பமாகோவுக்கு வெளியேயுள்ள கடியிலுள்ள இராணுவத் தளமொன்றில் ஜனாதிபதி இப்ராஹிம் அபூபக்கர் கெய்ட்டா தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், “இன்று ஆயுதப்படைகளின் சில மூலங்கள் அவர்களின் இடையீட்டினூடாக இவ்வாறு இது முடிவடைய வேண்டும் என விரும்பினால் உண்மையாக எனக்குத் தெரிவுள்ளதா” என அங்கிருந்து ஜனாதிபதி இப்ராஹிம் அபூபக்கர் கெய்ட்டா தெரிவித்துள்ளார்.

குறித்த கிளர்ச்சியானது கடி முகாமின் பிரதித் தலைவரான கேணல் மலிக் டியாவ், இன்னொரு தளபதியான ஜெனரல் சாடியோ கமராவால் தலைமை தாங்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பமாகோவிலிருந்து 15 கிலோ மீற்றரளவிலுள்ள முகாமைக் கைப்பற்றிய பின்னர் கிளர்ச்சிக்காரர்கள் பமாகோவை நோக்கி அணிவகுத்துச் சென்றிருந்ததுடன், அங்கு ஜனாதிபதி இப்ராஹிம் அபூபக்கர் கெய்ட்டாவை இராஜினாமாவை வலிறுத்துவதற்காக கூடியிருந்த சனத்திரளால் வரவேற்கப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகலில் ஜனாதிபதி இப்ராஹிம் அபூபக்கர் கெய்ட்டாவின் வசிப்பிடத்துக்குள் நுழைந்த கிளர்ச்சிக்காரர்கள் அங்கிருந்த அவரையும் பிரதமர் பெளபெள சிஸேயையும் கைது செய்திருந்தனர்.

கிளர்ச்சியில் ஈடுபடும் படைவீரர்களின் எண்ணிக்கை தெளிவில்லாமலுள்ளது.

வட மாலியின் கட்டுப்பாட்டை இஸ்லாமிய ஆயுததாரிகளும், துராக் ஆயுததாரிகளும் எடுப்பதை நிறுத்தாத சிரேஷ்ட தளபதிகளுக்கெதிராக கடந்த 2012ஆம் ஆண்டு இதே கடி முகாமில் படைவீரர்களால் கிளர்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டது இராணுவக் கிளர்ச்சியொன்றுக்கு வழிவகுத்து அப்போதையை மாலி ஜனாதிபதி அமடௌ தௌமனி தூரேயை பதவியிலிருந்து அகற்றியிருந்தது.




சீனாவின் தென்மேற்கு சிஷுவான் மாகாணத்தில் காணப்படும் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவன மரபுரிமையொன்றான 1,200 ஆண்டுகள் பழமையான 71 மீற்றர் நீளமாக லெஷான் பாரிய புத்தர் சிலையின் பெருவிரல்களுக்கு மேல் 1949ஆம் ஆண்டுக்குப் பிறகு வெள்ளம் மேலே சென்றுள்ளது.

ஐ. அமெரிக்கா

ட்ரம்பைப் பிரபலப்படுத்த

## ‘மனஃபோர்ட், விக்கிலீக்ஸை பயன்படுத்திய ரஷ்யா’

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கடந்த 2016ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கு உதவுவதற்காக ஐக்கிய அமெரிக்க குடியரசுக் கட்சியின் அரசியல் நிபுணரான போல் மனஃபோர்ட், விக்கிலீக்ஸ் இணையத்தளத்தைப் பயன்படுத்தியதாக குடியரக் கட்சியால் தலைமை தாங்கப்படும் செனட் செயற்குழுவானது குறித்த விடயம் தொடர்பான தனது இறுதி மீளாய்வில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனநாயகச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கெதிராக குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் பிரசாரத்துக்கு உதவுவதற்கான ரஷ்யாவின் முயற்சியில் விக்கிலீக்ஸ் முக்கிய பங்கொன்றை ஆற்றியதாகவும், ரஷ்ய புலனாய்வுத்துறைக்கு உதவுகின்றது என விக்கிலீக்ஸுக்கு தெரியும் என



குறித்த அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனநாயகக் கட்சியுடன் தொடர்பு டையை கணிணி வலையமை ப்புகள், கணக்குகளை ஹக் செய்யும், ஹிலாரி கிளின்டனுக்கு பாதிப்பு ஏற்படும் தகவலைகசிய விடும் ரஷ்ய நடவடிக்கைகளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நேரடியாக வழிநடத்தினார் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியா

நடிகர் சுஷந்த் மரணம்;


## சி.பி.ஐ விசாரணை

இந்தி நடிகரான சுஷந்த் சிங் ராஜ்புட் இறந்த வழக்கை இந்திய நடுவண் புலனாய்வுச் செயலகத்தை (சி.பி.ஐ) விசாரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மும்பையில் இவ்வாண்டு ஜூன் மாதம் சுஷந்த் சிங் ராஜ்புட் இறந்த நிலையில் இதில் அவரது காதலி ரியா சக்கரபோர்த்திக்கு தொடர்புள்ளதாக பீஹார் பொலிஸில் சுஷந்த் சிங் ராஜ்புட்டின் தந்தை புகாரளித்தார். இதையடுத்து பீஹார் தனிப்படை பொலிஸார், மும்பை சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில், பணப்பரிமாற்றம் தொடர்பாக, இம்மாதம் ஏழாம் திகதி ரியா சக்கரபோர்த்தி அமலாக்கத்துறை முன் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார்.

இந்நிலையில், தன் மீதான பீஹார் பொலிஸார் பதிந்துள்ள வழக்கை, மும்பை பொலிஸாரிடம் மாற்றக்கோரி உச்ச நீதிமன்றத்தில் ரியா சக்கரபோர்த்தி தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சுஷந்த் சிங் ராஜ்புட் இறந்த வழக்கை சி.பி.ஐ விசாரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், மும்பை பொலிஸாரிடம் உள்ள ஆதாரங்களை சி.பி.ஐ அதிகாரிகளிடம் ஒப்படைக்கவும் மும்பை பொலிஸாருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இந்தியா

## ‘காந்தி குடும்பத்தைச் சாராத தலைவர் வேண்டும்’

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவராக, காந்தி குடும்பத்தைச் சேராத ஒருவர் வர வேண்டும் என்று அக்கட்சியின் உத்தரப் பிரதேசத்துக்கான பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த பிரியங்கா காந்தி, காந்தி குடும்பத்தைச் சேராத ஒருவர் காங்கிரஸ் கட்சியின் தலைவராக வேண்டும் என்ற காங்கிரஸின் கீழ்ச்சபை உறுப்பினரான ராகுல் காந்தியின் கருத்துக்கு தானும் உடன்படுவதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை, பாரதிய ஜனதாக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிரான கருத்துகளில் காங்கிரஸ் உறுதியாக உள்ளது எனக் குறிப்பிட்ட பிரியங்கா காந்தி, ஊடகங்களின் புதிய முகத்தை புரிந்துகொள்ள தாமதம் ஆகிவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.



கடந்தாண்டு நாடாளுமன்ற கீழ்ச்சபைத் தேர்தலின்போது காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல்காந்தி பொறுப்பேற்றார். ஆனால், அந்த தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியை தழுவியது. இச்சூழலில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொறுப்பில் இருந்து ராகுல்காந்தி விலகுவதாக அறிவித்தார்.


அப்போது அவர் அளித்த பேட்டியில், காந்தி குடும்பத்தைச் சேராத ஒருவர் காங்கிரஸ் கட்சியின் தலைவராக வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்

தமிழ்Mirror www.tamilmirror.lk

பதிவு செய்வதற்கு

| Dialog | HUTCH | Mobitel |
|---|---|---|
| Type ACT TM and send to 87798 | Type TM and send to 2233 | Type REG TM and send to 77012 |
| Daily Rs.1/=+TAX | Monthly Rs.30/=+ TAX | Daily Rs.1/=+TAX |




* Terms and conditions apply

# எலும்புத் துண்டுகளுக்காகத் தரங்கெட்டுவிடக்கூடாது

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரை 1947ஆம் ஆண்டு உருவாக்கிய ஐக்கிய தேசிய கட்சியின்றி, ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு, இன்று (20) ஆரம்பமாகிறது.

50 வயதுக்கும் குறைந்த 87 உறுப்பினர்களும் அரசியலில் பழம் தின்று கொட்டைபோட்ட, 70 வயதையும் கடந்த 10 உறுப்பினர்களும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இது, சபையின் சம்பிரதாயங்களைப் புதுமுகங்கள் பின்பற்றி, கட்டிக்காப்பதற்கு உறுதுணையாய் இருக்கும்.

நாடாளுமன்ற வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், கறைபடிந்த பல சம்பவங்களே எம் கண்முன் தோன்றி மறைகின்றன. 52 நாள் ஆட்சியில், கதிரைகளைத் தூக்கியெறிந்தமை, மத நூல்களைப் பந்தாடியமை, மிளகாய்த்தூள் வீசியமை, கத்தியைக் காண்பித்து அச்சுறுத்தியமை போன்றவை உதாரணங்களில் சிலவாகும். சபை நடுவே, பௌத்த தேரருடன் மல்லுக்கட்டிப்புரண்டமை, செங்கோலைக் களவாடியமை போன்ற சம்பவங்களின் போதுதெல்லாம், பொதுவெளியில் கருத்துரைத்த ஜனாதிபதிகள், சபாநாயகர்கள், "நாடாளுமன்றம் தரங்கெட்டுவிட்டது; போதைப்பொருள் வர்த்தகர்களும் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டோருமே, சபைக்குள் புகுந்துவிட்டனர்" எனக் கடிந்துகொண்டனர்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கம், அரசமைப்புக்குள் புகுந்துவிளையாடக்கூடும். அப்போதெல்லாம் ஆதரவாகக் கையை உயர்த்தாது, எதிர்க்கவேண்டிய இடத்தில் எதிர்த்து, ஜனநாயகத்தைப் பாதுகாக்க உறுதிபூண வேண்டும். எலும்புத் துண்டுகளுக்காகச் சோரம் போய்விடக்கூடாது.

எதிர்க்கட்சியில் இருப்பதால், எதிர்ப்பு அரசியலை செய்யவேண்டுமென்ற பிற்போக்குவாதச் சிந்தனையைக் கைவிட்டு, அரசாங்கத்தை நல்வழியில் கொண்டு செல்வதற்கு, எதிரணியினர் செயற்படவேண்டும். நாட்டுக்குப் பங்கம் ஏற்படுத்தும் சட்டத்திருத்தங்களுக்கு ஓரணியில் நின்று எதிர்க்கலாம்.

சட்டவாக்க சபை தரங்கெட்டுவிட்டால், சுண்டுவிரலில் மையை பூசிக்கொண்டவர்கள்தான் காரணமென, வாக்காளர்கள் மீது குற்றஞ்சாட்டுவதைத் தவிர்க்கமுடியாது.

கடந்த நாடாளுமன்றங்களில், சண்டித்தனங்கள் காண்பித்தோர் புதிய சபைக்குள்ளும் இல்லாமல் இல்லை; பல புதுமுகங்களும் உள்ளன. அரசியலில் அனுபவம்மிக்கவர்கள், முன்னுதாரணமாக நடந்துகொள்ளவேண்டும்.

சட்டவாக்க சபை, சண்டியர்களின் கூடாரமாக மாறிவிடக்கூடாது. எதிர்கால சந்ததியினருக்கு இச்சபையேனும் ஓர் எடுத்துகாட்டாக இருக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்கான பயணம், இன்று ஆரம்பமாகின்றது என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk







# 'கஜேந்திரன்களின்' எதேச்சதிகாரம்; முட்டுச்சந்துக்குள் முன்னணி



புருஜோத்தமன் தங்கமயில்

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத்தாண்டி"

இப்படி ஆரம்பிக்கும் நாட்டார் பாடலொன்று தமிழில் மிகவும் பிரபலமானது. கடுவெளிச் சித்தர் எழுதியது. "...நீ விரும்பி, காத்திருந்து பெற்ற ஒரு விடயத்தை, தவறான வகையில் பயன்படுத்தி, வீணாக்கிக் கொள்கிறாய்..." என்பதுதான் இந்தப் பாடலின் எளிமையான பொருள்.

இந்தப்பாடல், யாருக்குப்பொருந்துகிறதோ இல்லையோ, தமிழ் அரசியல் சூழலுக்கு எப்போதுமே பொருந்தும். மக்கள் ஆணையைப் பெற்ற தரப்புகளாக, தமிழ்த் தேசிய அரசியலில் மேலெழுந்த பல தரப்புகள் பொறுப்பின்மை, தன்முனைப்பு மனநிலை (ஈகோ) ஆகியவற்றால், விடயங்களைக் கோட்டை விட்டு தாங்களும் தோற்று, மக்களையும் தோற்கடித்த வரலாறுகள் உண்டு. அதன் அண்மைய உதாரணங்களாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் பேரவை போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இந்தப் பத்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் இடம்பெற்று வருகின்ற குளறுபடிகள், குழந்தைப் பிள்ளைத் தனங்கள், எதேச்சதிகாரப் போக்கு ஆகியவை பற்றிப் பேச விளைகின்றது.

'முன்னணி' என்ற அடையாளத்தினூடாக, கடந்த 11 ஆண்டுகளாக, தேர்தல் அரசியல் வெற்றிக்காகப் போராடி வந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இந்தப் பொதுத் தேர்தலில், இரண்டு நாடாளுமன்ற ஆசனங்களை வென்றிருக்கின்றது. கூட்டமைப்பின் மீதான அதிருப்தி, முன்னணி இளைஞர்கள் மீதான நம்பிக்கை ஆகியவற்றை முன்னிறுத்தி, வாக்களித்த மக்களின் விரலில் தீட்டப்பட்ட 'மை' அழிபடும் முன்னமே, முன்னணிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த வியாழக்கிழமை (13) இரவு 'Zoom' செயலி மூலம், முன்னணியின் மத்திய குழு கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில், முன்னணியின் மூன்றாவது முக்கியஸ்தரான விஸ்வலிங்கம் மணிவண்ணன், அவர், வகித்துவந்த தேசிய அமைப்பாளர், பேச்சாளர் ஆகிய பதவிகளில் இருந்து நீக்கப்பட்டார்.

மணிவண்ணன், முன்னணியின் மத்திய குழு உறுப்பினராக இருந்த போதிலும், அந்தக் கூட்டத்துக்கு முதலிரண்டு முக்கியஸ்தர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரால், திட்டமிட்ட ரீதியில் அழைக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக, அப்படியொரு கூட்டம் கூட்டப்படுவதாக, அவருக்குச் சொல்லப்படவுமில்லை; Zoom செயலி இணைப்பு வழங்கப்படவுமில்லை.

இந்தக் கூட்டத்தில், மணிவண்ணனைப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கான காரணங்களாக, கொள்கைப் பிறழ்வும் கட்சியின் தீர்மானங்களை மீறியமையும் போன்ற காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

ஆனால், கடந்த தேர்தல் பிரசாரக் காலங்களிலேயே, மணிவண்ணன் முன்னணியில் இருந்து சீக்கிரமாக விலக்கப்பட்டுவிடுவார்; அல்லது, அவரே விலகிவிடுவார் என்கிற நிலைப்பாடு உருவாகியிருந்தது.

மணிவண்ணனை எப்படியாவது வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அவரது ஆதரவாளர்கள் வட்டம், குறிப்பாக, யாழ். இந்துக் கல்லூரி இளைஞர் குழுவொன்று மும்முரமாக இருந்தது. அதேபோல, அவரைத் தோற்கடிக்க வேண்டும் என்பதில், முன்னணியின் ஒரு குழுவினர் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அது, விருப்பு வாக்குப் போட்டி என்கிற நிலையைத் தாண்டிய மோதலாக முன்னணிக்குள் எழுந்திருந்தது.

'மணியுடன் பேசுவோம்' என்று, தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாளன்று மணிவண்ணன் நடத்திய சந்திப்பும் அதில், அவர், தன்னை முன்னிறுத்திப் பேசிய விடயமும் 'முன்னணி' என்கிற கட்டமைப்புக்குள் எவ்வாறான பிளவு ஏற்பட்டிருக்கின்றது என்பதை உணர்த்தியது.

முன்னணிக்குள் ஏற்பட்ட பிளவு என்பது, கஜேந்திரகுமார், கஜேந்திரன் ஆகியோரின் எதேச்சதிகாரப் போக்கினால் விளைந்தது என்பது, மணிவண்ணனின் ஆதரவாளர்களின் வாதம்.

'கஜேந்திரன்களுக்கு' (கஜேந்திரகுமார்+ கஜேந்திரன்) இருக்கிற முக்கிய பிரச்சினை, அவர்களது நிலைப்பாடுகளைக் கேள்விக்குட்படுத்தும் அனைவரையும் 'துரோகி' அடையாளம் சூட்டுதல் ஆகும். அது ஒரு கட்டத்தில், சொந்தக் கட்சி இளைஞர்களை நோக்கியதாகவும் மாறிவிட்டது.

கடந்த ஒருசில தினங்களுக்கு முன்னர், முன்னணியின் யாழ். மாநகர சபை உறுப்பினரான பார்த்தீபன் வரதராஜன், தன்னுடைய தந்தையைப் பற்றி எழுதிய நினைவுக் குறிப்பொன்றில், சொந்தக் கட்சி உறுப்பினர்களை நோக்கி, துரோகி அடையாளம் சூட்டும் முன்னணிக்குள் எழுந்திருக்கின்ற 'குணம்' பற்றி, பெரும் கவலை வெளியிட்டிருந்தார்.

(தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பிக்கப்பட்ட தருணத்தில், அதன் தலைவராக இருந்து, 2013ஆம் ஆண்டளவில், அதிலிருந்து விலகிய பொருளியல் ஆசிரியர் அமரர் சி.வரதராஜனின் மகனே, பார்த்தீபன் ஆவார்.)

கடந்த, ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், தேர்தலைப் புறக்கணிக்க மக்களைக் கோருவது என்று, 'கஜேந்திரன்கள்' முடிவெடுத்தமை குறித்து மணிவண்ணன், கட்சிக்குள் மாற்றுக் கருத்தை வெளியிட்டிருக்கின்றார். "மக்களது நிலைப்பாடுகளுக்கு எதிராக, தொடர்ச்சியாகக் கட்சி முடிவெடுப்பது நல்லதல்ல" என்று அவர் வாதிட்டிருக்கின்றார். அது, வார்த்தைகள் தடிக்கும் நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. ஒரு கட்டத்தில் மணிவண்ணன் கூட்டத்திலிருந்து வெளியேறியும் இருந்தார்.

ஆனால், கட்சிக்குள் தான் முன்வைத்த விடயங்கள் தொடர்பில், கட்சியின் நிலைப்பாட்டை மீறி, அவர் பொது வெளியில் பிரஸ்தாபித்திருக்கவில்லை. ஆனால், தடித்த வார்த்தைகள் தொடர்பில், தன் மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கலாம் என்று எண்ணியிருந்தார். ஆனால், அப்போது விடயம் கைவிடப்பட்டுவிட்டது. ஜனாதிபதித் தேர்தலில், முன்னணியின் நிலைப்பாடுகளுக்கு எதிராக நின்று, தமிழ் மக்கள் வாக்களித்திருந்தார்கள்.

பத்து ஆண்டுகள் கடந்தும், முன்னணியை கட்சியாகப் பதிவு செய்யாமை தொடர்பில், பலரும் கேள்வி எழுப்பி வந்தார்கள். இந்தப் பத்தியாளரும் பலமுறை கேள்வி எழுப்பியிருக்கிறார். அவ்வாறான சூழலில், முன்னணியை கட்சியாகப் பதிவு செய்வது சார்ந்து, மணிவண்ணன் தரப்பு ஆர்வம் வெளியிட்டது; கட்சிக்குள் வலியுறுத்தவும் ஆரம்பித்தது. இதன் மூலம், கட்சியின் கட்டமைப்பை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம் என்பது எதிர்பார்ப்பு.

ஆனால், முன்னணியை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்கிற கோரிக்கை, 'கஜேந்திரன்களுக்கு' குறிப்பாக, கஜேந்திரகுமாருக்கு உவப்பாக இருக்கவில்லை. ஏனெனில், முன்னணி என்கிற அடையாளத்துக்கு ஊடாக, காங்கிரஸை மீட்டெடுப்பதுதான் அவரின் ஒற்றை இலக்கு. அதற்குத் தடையாக, மணிவண்ணன் போன்றவர்கள் இருக்கிறார்கள் என்பது, அவருக்கு சிக்கலான விடயமாக மாறியது.

அடுத்து, தங்களைத் தாண்டி, முன்னணிக்குள் மணிவண்ணனை நோக்கி இளைஞர் ஆதரவுத் தளமொன்று உருவாகி வந்தமை, 'கஜேந்திரன்களால்' கொஞ்சமும் இரசிக்கப்படவில்லை. அந்த ஆதரவுத் தளம், கேள்விகளுக்கு அப்பால் நின்று, 'கஜேந்திரன்களை'ப் பின்தொடர்வதற்குத் தயாராக இருக்கவில்லை.

வழக்கமாக 'கஜேந்திரன்களின்' 'ஒற்றைவாதம்' என்பது, கொள்கை மறுதலிப்பற்ற தரப்பு, தாங்கள் மட்டுமே என்பதாகும். ஆனால், அவர்களும் காலத்துக்குக் காலம், கொள்கைகளை மாற்றி வந்திருக்கிறார்கள். அதற்கு, வடக்கு மாகாண சபையின் கடந்த தேர்தலைப் புறக்கணித்தமையை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.


அதாவது, முன்னணியின் தலைவராக இருந்த வரதராஜன், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தினார். அப்போது 'கஜேந்திரன்கள்', "மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது, 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதாக அமையும்" என்று கூறி நிராகரித்திருந்தனர். ஆனால், அந்த நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டு, அடுத்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாராகிவிட்டார்கள்.

ராஜபக்ஷக்களுக்குத் துதிபாடும் அரசியல் நெறியொன்று, தென் இலங்கையில் நிலைபெற்றிருக்கின்றது. அது, ராஜபக்ஷக்களைக் கேள்விகளுக்கு அப்பால் நின்று தொழுகின்றது. அப்படியானதொரு நிலையொன்றை, தங்களைச் சுற்றிக் கட்டமைக்கும் நிலைப்பாடுகளில், 'கஜேந்திரன்கள்' ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் கூறுவதுதான் 'வேதவாக்கு' என்பதுதான் அவர்களின் எதிர்பார்ப்பு.

இதனை, கடந்த ஒருவார காலமாக, முன்னணியின் ஆதரவாளர்களுக்கு இடையில் நடைபெற்றுவருகின்ற சமூக ஊடக உரையாடல்களைப் பார்க்கின்ற போது புரிந்து கொள்ள முடியும். அதனை இன்னமும் நேரடியாகச் சொன்னால், 'மூளைச் சலவை' செய்யப்பட்ட கூட்டமொன்றைக் கட்டி வளர்க்க வேண்டும் என்பதுதான், 'கஜேந்திரன்களின்' நினைப்பு.

தமிழ்த் தேசிய அரசியலில் முன்னணியை ஒரு மாற்றாக நம்பி, அதன் பின்னால் சென்று, அதன் வெற்றிக்காக இரவு பகலாக உழைத்த இளைஞர்கள், 'கஜேந்திரன்களின்' எதேச்சதிகாரப் போக்கால், இன்று போக்கிடமின்றி நிற்கிறார்கள். கிட்டத்தட்ட, முட்டுச்சந்துக்குள் மாட்டிக் கொண்ட நிலையை ஒத்தது.

ஒவ்வொரு தடவையும் மக்களால் நிராகரிக்கப்படும் போதும், அவர்கள் தாங்கி நின்ற வலியும் அவமானமும் பெரியது. அதனைத் தாண்டி, சிறிய வெற்றியொன்றைப் பெற்றிருக்கின்ற தருணத்தில், அதனை அப்படியே போட்டுடைப்பது என்பது, ஜீரணிக்க முடியாததுதான்.



## வாழ்வியல் தரிசனம்

இனி, என்ன செய்ய வேண்டும்? அடுத்தது என்ன... என்ன? என, உங்களுக்கு உள்ளேயே கேள்வி கேட்பீர்களாக!

செய்ய ஆரம்பித்த செயலைக் கைவிட்டுவிட்டு, எதுவுமே செய்யாமல் இருந்துகொண்டு, புதிய காரியம் என்ன.., அடுத்தது என்ன செய்ய வேண்டும் எனக் கேட்பதில் அர்த்தம் இல்லையே?

முறையாகத் திட்டமிடாமலும் விடயம் தெரிந்தவர்களிடம் ஆலோசனைகளைக் கேட்காமலும் மனம்போன போக்கில் நடப்பவர்கள், அடுத்து எதைத்தான் செய்யப்போகின்றார்கள்.

சின்ன விடயங்களையும் முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும். என்னிடத்தில் திறமை இல்லை என எண்ணியபடி, காரியங்களைச் செய்வது, தனக்குத் தானே முட்டுக்கட்டை போடுவது போன்றதாகும்.

காரியசித்தி என்பது, மனோ சக்தியுடன் தொடர்புபட்டது. எடுத்த எடுப்பில் பெரிய திட்டங்களை, கையில் எடுக்காமல், அனுபவங்களைத் தேடிச் செயலில் இறங்குவதே மேல். பிறரைப் போல், வாழ எண்ணாது, செயலில் தூய்மையுடன் உங்களை உள்நுழைத்தால், நினைப்பது நடக்கும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வானிலையால் வெற்றிலை விலை அதிகரிப்பு

வெற்றியின் விலை அதிகரித்துள்ளதால், வெற்றிலைக் கூறு ஒன்றின் விலை 50 ரூபாயாக அதிகரித்துள்ளது என்று, வெற்றிலைப் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நாள்களில் நிலவும் வரட்சியான வானிலை காரணமாக, பஹதஹேவாஹெட்ட உட்பட அதனைச் சுற்றியுற்ற பிரதேசங்களில் வெற்றிலை, பாக்குகளின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக, இவற்றில் விலை துரிதமாக அதிகரித்துள்ளது. அந்தவகையில், வெற்றிலைக் கூறு ஒன்றின் விலை, ரூபாய் 50 ஆக அதிகரித்துள்ளது. இதற்கு முன்னர், வெற்றிலைக் கூறு ஒன்றின் விலை, ரூபாய் 30 என்ற வகையில்தான் விற்பனை செய்யப்பட்டது.

வெற்றிலை, பாக்கு போன்றவை சந்தைக்கு வருவது குறைவடைந்தமையால், சில்லறையாக விற்பனை செய்யப்படும் வெற்றிலைக் கூறு ஒன்றின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வெற்றிலை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பாக்கு ஒன்றின் விலை ரூபாய் 20 வரையிலும் வெற்றிலை ஒன்றின் விலை ரூபாய் ஐந்து வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது. கொட்டைப் பாக்கு ஒன்றின் விலை ரூபாய் ஆறு ஆக இருந்த போதிலும், மக்கள் அதை அதிகம் விருப்பாமையால் அதற்குக் கேள்விகள் குறைவாகும்.

வரட்சியான வானிலை தொடர்ந்து நீடிக்குமானால் வெற்றிலைக் கூறு ஒன்றின் விலை, மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் மலையகத்திலுள்ள அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் எந்நாளும் வெற்றிலை மெல்லுபவர்களாக உள்ளனர். இதன் மூலம் அதிகம் தோட்ட மக்கள் பாதிக்கப்படலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

–இக்பால் அலி

# கிராமிய தொழிற்றுறைகளுக்கு முன்னுரிமை

## பிரம்பு, பித்தளை, களிமண், தளவாடங்கள் மற்றும் கிராமிய தொழிற்றுறை மேம்பாடுகள் அமைச்சு நடவடிக்கை

■ ச. சேகர்

புதிதாகப் பதிவியேற்றுள்ள இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சில அமைச்சுகள், வெளியிலிருந்து பார்க்கும் போது நகைப்பூட்டுவதாகவும், ஏளனம் செய்வதாகவும் அமைந்துள்ளது. குறிப்பாக சமூக வலைத்தளங்களில் சில அமைச்சர்களை நையாண்டி, ஏளனம் செய்யும் வகையில் சில கருத்துகள் பகிரப்பட்டிருந்ததை கடந்த வாரம் முழுவதிலும் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு அதிகளவு பேசப்பட்ட அமைச்சாக பிரம்பு, பித்தளை, களி மண்சார் உற்பத்திகள், தளவாடங்கள் மற்றும் கிராமிய தொழிற்றுறைகளுக்கான அமைச்சையும் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பிரசன்ன ரணவீரவையும் குறிப்பிட முடியும். கம்பஹா மாவட்டம் சார்பாக போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்த இவருக்கு இந்த பதவி வழங்கப்பட்டுள்ளமைக்காக பலரும் பலவிதமான கருத்துகளை முன்வைத்திருந்தனர்.

மாறாக இவருக்கு வழங்கப்பட்டுள்ள துறையின் முக்கியத்துவம் பற்றி நன்கு அறிந்த ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான மயூர சமரகோன் குறிப்பிடுகையில்,

களி மண் தயாரிப்பு அமைச்சின் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படுமாயின், முழு நாடும் முன்னேற்றம் காணும். வீட்டுக் கூரைகளுக்கு அஸ்பெஸ்டஸ் தகடுகளைப் பயன்படுத்துவதைக்கூட அபிவிருத்தியடைந்த நாடுகளில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டு களி மண்ணைக் கொண்டு தயாரிக்கப்படும் உள்நாட்டுக் கூரை, ஓடுகள் தொழிற்றுறை மிகவும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. அஸ்பெஸ்டஸ் கூரைகளை இட்டதும், வீடுகளில் இருக்க முடியாது அதிகளவு வெப்பமாக உள்ளது எனக் குறைகூறி, பின்னர் வெளிநாடுகளிலிருந்து மின்விசிறிகள் மற்றும் வாயு குளிரூட்டிகளை இறக்குமதி செய்கிறோம். காஸ் அடுப்புகளுக்கு பொருத்தமான பானைகள் போதியளவு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாமையால், அலுமினியத்தினாலான பாத்திரங்களை சீனாவிலிருந்து இறக்குமதி செய்து, அவற்றில் உணவு சமைத்து, அலுமினியம் கலந்த உணவை அருந்துகின்றோம். சீனாவிலிருந்து வரும் டைல்கள் பதிக்கப்பட்ட நிலத்தில் காணப்படும் கடினத்தன்மை, களி மண் மாபிள்களில் காணப்படுவதில்லை. களி மண் மாபிள்களில் காணப்படும் குளிர்மை தன்மை பாதங்களுக்கு இதமானதாக அமைந்துள்ளன. ஆனாலும், விலையில் உயர்ந்ததால், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மாபிள்கள் பயன்படுத்துகின்றோம். செங்கற்களின் விலை உயர்வாக காணப்படுவதால், சீமெந்து கற்களாலான வீட்டை நிர்மாணிக்கின்றோம். அதன் பின்னர் செங்கற்களால் நிர்மாணிக்கப்பட்ட ஹோட்டல் அறைகளுக்குச் சென்று, ”இவை மிகவும் இதமாக உள்ளன” என ஆதங்கம் செய்கிறோம். ஹோட்டல் அறைக்கான வாடகையையும் செலுத்துகின்றோம். வீட்டில் படுக்கை அறையை களிமண் கொண்டு பூசிக் கொள்வது உகந்ததாக வாஸ்து முறைப்படி கூறப்பட்டுள்ளது. லக்சல விற்பனை நிலையங்களில் காணப்படும் மட்பாண்டங்களின் விலை மிக உயர்வாகும். அவை வேறு மட்டத்தில் முன்னெடுக்கப்படும் வியாபாரமாகும். கிராமிய மட்டத்தில் இவ்வாறான தொழில்களில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து கைகொடுத்தால், வேலைவாய்ப்புகளின்றி காணப்படும் பலருக்கு வருமானமீட்டும் வாய்ப்புக் கிடைக்கும். இதற்கு விசேடமாக கற்றலில் ஈடுபட வேண்டியதில்லை. சுருக்கமாக குறிப்பிடுவதானால், களி மண் உற்பத்திகளை சரியான முறையில் மேற்கொண்டால், இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியை அதிகரித்துக் கொள்ள முடியும். *Made In Srilanka* எனும் நாமம் பொறிக்கப்பட்ட மண் கோப்பைகளில் வெளிநாட்டவர்கள் நெஸ்கஃபே அருந்துவார்கள். களி மண் சட்டிகளில் பொதி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் மாத்தறை மீன் புளிக்குழம்பு, கொஹில அல்லது பலா விதைகளுக்கு வெளிநாட்டவர்களின் சுப்பர்மார்க்கெட்களில் அதிகளவு கேள்வி காணப்படுகின்றது. இந்த களி மண் அமைச்சின் பொறுப்புகள் முறையாக முன்னெடுக்கப்பட்டால், அது மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக அமையும். சுருக்கமாக குறிப்பிட்டால், இந்த அமைச்சுக்கு நியமிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கு, ஜனாதிபதி வழங்கியுள்ள பொறுப்பு, “இயலுமாயின் இந்த விடயத்தைப் புரிந்து கொண்டு நிறைவேற்றிக் காண்பிக்கவும்” எனும் ஒரு சவாலாகும். இனி இந்த பொறுப்பை ஏற்று, முறையாக அதனை நிறைவேற்றிக் காண்பிப்பதாகும். என்றார்.

இந்த அமைச்சினால் இலங்கையின் பாரம்பரிய தொழிற்றுறைகள் அதாவது இலங்கைக்கு அடையாளத்தை வழங்கக்கூடிய தொழிற்றுறைகள் உள்ளடங்கியுள்ளன. டிஜிட்டல் மயமாக்கம், நவீன மயமாக்கம் போன்ற காரணிகளால் சௌகரியத்தை நோக்கி நகர்ந்துள்ள நிலையில், இலாபகரமான, சௌகரியமாக மற்றும் துரிதமாக தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் இலாபகரமான தீர்வுகளுக்கு பெருமளவானோர் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர்.

கொவிட்-19 தொற்றுப் பரவலினூடாக எமக்கு உணர்த்தப்பட்ட முக்கிய படிப்பினையாக, இயற்கையுடன் ஒன்றித்து, இயற்கையுடன் பழக்கப்படுத்தி வாழப்பழக வேண்டும் என்பது அமைந்துள்ளது. இந்நிலையில், இந்தத் துறைக்கு வலுச்சேர்த்து மீளக் கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பாக இது அமைந்துள்ளது. அதனூடாக இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் தெரிவுகளை விஸ்தரித்துக் கொள்ள முடியும் என்பதுடன், அந்நியச் செலாவணியை ஈட்டுக் கொள்வதற்கும் வாய்ப்பாக அமைந்திருக்கும்.

ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகோலும் இந்த பிரம்பு, பித்தளை, களி மண் சார் உற்பத்திகள் போன்ற கிராமிய தொழிற்றுறைகளின் முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளமையானது நல்லதோர் ஆரம்பமாக அமைந்துள்ளது.

வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் இந்தத் துறைகளில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களை இனங்கண்டு, அவர்களை ஊக்குவிப்பதற்கு அமைச்சினால் எவ்விதமான திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.









## பங்குச் சந்தை

COLOMBO STOCK EXCHANGE

2020.08.19

அனைத்து பங்குகளின் விலைச்சுட்டெண் 5,351.03

S&P SL20 விலைச் சுட்டெண் 2,370.29

## நாளாந்த பங்குச் சந்தை நிலைவரம்



2020.08.19

### TOP 10 விலை உயர்ந்த, சரிவடைந்த நிறுவனங்கள்

| விலை உயர்ந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| ப்ளு டயமன்ட்ஸ் | 0.40 | 0.50 | 0.10 |
| டீஸ் அக்ரோ | 0.40 | 0.50 | 0.10 |
| ப்ரௌன் இன்வஸ்மன்ட்ஸ் | 2.20 | 2.70 | 0.50 |
| எல் ஓ எல் சி டெவ் பின். | 30.60 | 36.00 | 4.40 |
| ரேணுகா கெப்பிடல் | 3.30 | 3.80 | 0.50 |
| பேருவல ரீசோர்ட்ஸ் | 0.70 | 0.80 | 0.10 |
| கொம் லீஸ் எனட் பின். | 2.90 | 3.30 | 0.40 |
| முல்லர்ஸ் | 0.80 | 0.90 | 0.10 |
| பிபீபீ ஹோல்டிங்ஸ் | 9.80 | 10.70 | 0.90 |
| மல்டி பின். | 8.90 | 9.70 | 0.80 |

| விலை சரிவடைந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| இன்ட்ரஸ்ரியல் எசப் | 0.30 | 0.20 | (0.10) |
| ப்ரைம் பின். | 11.90 | 10.30 | (1.60) |
| சி டி லேண்ட் | 29.70 | 27.20 | (2.50) |
| லயன் ப்ரேவரி | 560.30 | 520.00 | (40.30) |
| ப்ரின்ட் கெயார் பிஎல்சி | 27.20 | 25.30 | (1.90) |
| மெக்வூட்ஸ் எனர்ஜி | 1.70 | 1.60 | (0.10) |
| டெல் லங்கா | 10.90 | 10.30 | (0.60) |
| மகாவலி ரீச் | 13.80 | 13.10 | (0.70) |
| லங்கா வெஜ்ஜர்ஸ் | 41.90 | 40.00 | (1.90) |
| ஹேலிஸ் | 189.90 | 181.50 | (8.40) |

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### TT RATES

ISSUED BY: INTERNATIONAL OPERATIONS DEPARTMENT
DATE : 19 AUGUST 2020

| CURRENCY | BUYING RATE | SELLING RATE |
|---|---|---|
| Australian Dollar | 130.42 | 136.54 |
| Canadian Dollar | 137.31 | 142.75 |
| Chinese Yuan (Renminbi) | 25.85 | 27.42 |
| Euro | 216.34 | 223.86 |
| Japanese Yen | 1.71 | 1.78 |
| Singapore Dollar | 132.44 | 137.67 |
| Sterling Pound | 240.38 | 248.15 |
| Swiss Franc | 200.17 | 207.85 |
| US Dollar | 182.14 | 186.44 |

| COUNTRY | CURRENCY | INDICATIVE RATE |
|---|---|---|
| Bahrain | Bahrain Dinar | 488.30 |
| Kuwait | Kuwait Dinar | 602.64 |
| Oman | Oman Rial | 478.10 |
| Qatar | Qatar Riyal | 50.24 |
| Saudi Arabia | Saudi Arabian Riyal | 49.07 |
| UAE | UAE Dirham | 50.11 |

### சர்வதேச பெற்றோலிய பொருட்களின் விலை

| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் | |
|---|---|
| பிரென்ட் | 45.07 அமெ.டொ. / பீப்பாய் |
| ஒபெக் | 44.49 அமெ.டொ. / பீப்பாய் |

| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் -சிங்கப்பூர் சந்தை | |
|---|---|
| பெற்றோல் | 47.95 அமெ.டொ. / பீப்பாய் |
| டீசல் | 48.11 அமெ.டொ./ பீப்பாய் |
| மண்ணெண்ணெய் | 43.06 அமெ.டொ. / பீப்பாய் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### 2020 ஓகஸ்ட் 18 இலுள்ளவாறான SLIBOR வீதங்கள்

| | |
|---|---|
| மறு நாள் | 5.53 |
| 7 நாள்கள் | 5.92 |
| 1 மாதங்கள் | 6.05 |
| 3 மாதங்கள் | 6.96 |
| 6 மாதங்கள் | 7.61 |
| 12 மாதங்கள் | 8.50 |

# BID2WIN போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பரிசுகள்

*zMessenger* நிறுவனம் *Hutch* நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த *BID2WIN* போட்டி அண்மையில் நிறைவடைந்ததுடன், இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு ஊக்குவிப்புச் செயற்றிட்டங்களின் வெற்றியாளர்களுக்கு இதன் போது பரிசுகளும் வழங்கப்பட்டன.

2020 பெப்ரவரி 1ஆம் திகதி முதல் மார்ச் 31ஆம் திகதி வரை இடம்பெற்ற *Wagon R* கார் ஊக்குவிப்பின் வெற்றியாளராக கடுவலையைச் சேர்ந்த அசேன் இமந்த குணசேன மற்றும் 2020 ஜூலை 1ஆம் திகதி முதல் ஜூலை 20ஆம் திகதி வரையான *Honda Dio*பைக் ஊக்குவிப்பின் வெற்றியாளராக மஸ்பொத்தயைச் சேர்ந்த பி.ஏ.ஜே. காமினி பெரேராவும் தெரிவாகினர்.

*BID2WIN*, மொபைல் சந்தாதாரர்களிடையே மிகவும் பிரபலமான போட்டியாகும். இது குறுந்தகவல் மூலமான விலைகோரல் மூலம் பாரிய பரிசுகளை வெல்லும் வாய்ப்பை வழங்குகின்றது. இதற்கு அவர்கள் செய்ய வேண்டியது மிகவும் குறைந்த தனித்துவமான விலைகோரல் பெறுமதியை முன்வைப்பதாகும். இதன்போதுவெற்றியாளருக்கு ஒதுக்கப்பட்ட பரிசு வழங்கப்படும்.இந்த போட்டியை மிகவும் சுவாரஸ்யமாகவும் உற்சாகமாகவும் ஆக்குவது என்னவென்றால், மொபைல் போன்கள், மோட்டார் பைக்குகள், கார்கள் மற்றும் பல புதிய பரிசுகள் சீராக அறிமுகப்படுத்தப்படுகின்றமையாகும். போட்டியின் ஏற்பாட்டாளர்கள் போட்டியின் தொடக்கத்தையும் முடிவையும், பரிசு விபரங்களையும்மற்றும்ஒவ்வொரு போட்டியின் வெற்றியாளர்களையும் எஸ்.எம்.எஸ் அல்லது ஒளிபரப்பு ஊடகங்கள் வழியாக அறிவிக்கின்றனர்.




# புகைப்பரிசோதனை சேவைக்கு வரவேற்பு

*Drivegreen*, தனது அறிவார்ந்த, திறமைமிக்க ஊழியர்களினால் வழங்கும் சிறந்த சேவைக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து அதிகளவு வரவேற்பைப் பெற்றுள்ளது. நிறுவனத்தினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்த கருத்தாய்வினூடாக இது கண்டறியப்பட்டிருந்தது.

வாடிக்கையாளர்களை மய்யப்படுத்திய, நட்பான மற்றும் கவர்ச்சிகரமான சேவை போன்றவற்றின் காரணமாக, வாடிக்கையாளர்களினால் தமது வாகனப் புகைப்பரிசோதனைத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள தொடர்ச்சியாக *Drivegreen*ஐ தாம் தெரிவு செய்வதாக இந்த ஆய்வினூடாக கண்டறியப்பட்டிருந்தது.

2008ஆம் ஆண்டில் *CleanCo* லங்கா (பிரைவட்) லிமிடெட்டின் இனால் நிறுவப்பட்ட *Drivegreen*இன் உயர் பரிசோதனை சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் போன்றன சர்வதேச பரிசோதனை நியமங்களின் பிரகாரம் அமைந்துள்ளதுடன், திறன் படைத்த, நேர்மையான மற்றும் அர்ப்பணிப்பான செயலணியினரால், வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் சேவையாற்றும் மனப்பாங்குடன் சிறந்த புகை பரிசோதனை சேவை வழங்கப்படுகின்றது.







# மஞ்சள் காட்டும் மவுசு





மகேஸ்வரி விஜயனந்தன்

மஞ்சள் என்றாலே அது, மங்களத்தையும் ஆரோக்கியத்தையும் குறிக்கும். இவ்வாறான மஞ்சள், தமிழர்களின் வாழ்வியலோடு கலாசாரம், ஆன்மிகம், உணவு போன்ற முறைமைகளில் ஒன்றித்துள்ளது. சிறந்த நுண்ணுயிர்க் கொல்லியாக விளங்கும் மஞ்சளின் அருமை, பெருமைகளை முழு உலகமும் இன்று அறிந்து, வியக்க வைத்த பெருமை, கொரோனா வைரஸையே சாரும். ஏனெனில், மஞ்சள் போன்றதொரு சிறந்த நுண்ணுயிர்க்கொல்லிக்கு நிகரேதும் உலகில் இல்லையென்று இன்றைய நவீன மருத்துவமும் சித்த மருத்துவமும் உறுதி செய்துள்ளதால், கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில், அருமையும் மேன்மையும் நிறைந்த பொருளாக, மஞ்சள் திகழ்கின்றது.

கொவிட் -19 நோயின் பிறப்பிடமாகக் கருதப்படும் சீனாவில், கொரோனா வைரஸ் பரவுகை அதிகரித்த போது, விமானம் மூலம் அழைத்துச் செல்லப்பட்ட நோயாளிகள் மீது, சீனாவின் சில பகுதிகளில், மஞ்சள் நீர் தெளிக்கப்பட்ட காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகின.

கொரோனா வைரஸ் மட்டுமா, புற்றுநோய்க் கட்டிகள் உருவாகாமல் தடுப்பதிலும், மஞ்சளுக்குப் பங்குள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மரண வீடுகளுக்குச் சென்று வந்தால், தலை முதல் பாதம் வரை, மஞ்சள் நீரால் கழுவுவதன் அவசியத்தை எமது மூதாதையர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர். அதாவது, சடலத்திலிருந்து கிருமிகள் எம்மில் பரவுவதைத் தடுப்பதற்காக, மஞ்சள் நீரில் எம்மைச் சுத்தம் செய்ய வேண்டுமென, எமது மூதாதையர்கள் வலியுறுத்தியதை, இன்றைய தலைமுறைகள் இன்றே நன்கு புரிந்துள்ளனர்.

**உள்நாட்டில் மஞ்சள் உள்ளிட்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக, சம்பிரதாயமுறையை விட, நவீன உற்பத்தி முறைகளைப் பயன்படுத்த, உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பது சிறப்பு**

ஆசிய நாட்டவர்களைப் பொறுத்தவரை, குறிப்பாக இலங்கை, இந்தியர்களின் உணவு தயாரிப்புகளின்போது, மஞ்சளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இந்த உணவுமுறைப் பழக்கத்தை, இன்று மேலைநாட்டவர்களும் விரும்புவது, எமது உணவுகளில் தலைமுறை தலைமுறையாகச் சேர்க்கப்படும் சில பொருள்கள், பல நோய்களின் தாக்கத்திலிருந்து எம்மைக் கவசம்போல் பாதுகாக்கின்றன.

மஞ்சள் உற்பத்தியில் இந்தியாவே முன்னிலை வகிப்பதுடன், உலக நாடுகளுக்குத் தேவையான 80 சதவீத உற்பத்தியை, இந்தியாவே பூர்த்திசெய்கின்ற நிலையில், மஞ்சளை இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யும் நாடுகள் வரிசையில், இலங்கையே முதலிடம் வகிக்கின்றது.

இந்நிலையில், 2019ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி, ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்‌ஷ, டிசெம்பர் 5ஆம் திகதி, உணவுப்பொருள் இறக்குமதி தொடர்பில் புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, கறுவா, மிளகு, புளி, சாதிக்காய், மஞ்சள், இஞ்சி, கராம்பு உள்ளிட்ட பொருள்களின் இறக்குமதிக்குத் தடை விதித்தார்.

எனினும், இவ்வாறான பொருள்களுக்கான இறக்குமதித் தடையால், எமது உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியின் உச்சத்துக்குச் சென்றாலும், இலங்கையர்களின் தேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்கான உற்பத்திகளை, உள்நாட்டு உற்பத்தியாளர்களால் வழங்க முடியாது போயுள்ளமை கவலைக்குரியதே.

இதனால், ஏனைய பொருள்களை விட, இலங்கையில் மஞ்சளுக்கான தட்டுப்பாடு அதிகளவில் ஏற்படத் தொடங்கியது. இந்தத் தட்டுப்பாடானது, மார்ச் மாதத்தில் இலங்கையில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் அச்சுறுத்தலையடுத்து, பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, மஞ்சளுக்கான கேள்வி அதிகரிப்பைப் போன்று, சந்தைகளில் மஞ்சளின் விலையும் அதிகரிக்கத் தொடங்கியது. மஞ்சள் ஒரு கிலோகிராமின் விலை, 3,000 - 3,500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக, நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

ஆனால், போதியளவு மஞ்சள் கிடைக்காமையே மஞ்சள் விலை அதிகரிப்புக்குக் காரணமென்று, வர்த்தகர்கள் தமது பக்க நியாயத்தை முன்வைக்கும் அதேவேளை, மஞ்சளில் கோதுமை, கடலை மா உள்ளிட்டவை கலப்படம் செய்து, விற்பனை செய்யும் மோசடிகளையும் வர்த்தகக் கும்பலொன்று செய்து வருவதுடன், அண்மையில் இவ்வாறு மஞ்சளில் கலப்படம் செய்த பலர், நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**ஏந்தவொரு முன்னேற்பாட்டையும் முன்னெடுக்காமல், மஞ்சள் இறக்குமதி தடை செய்யப்பட்டமை இன்றைய மஞ்சள் தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு, கடத்தல், பதுக்கல் போன்ற செயல்களுக்கு காரணமாகியுள்ளது**

**பாதகங்களைப் பொருட்படுத்தாமல், உரிய திட்டங்களின்றி இறக்குமதி தொடர்பான முடிவுகளை எடுப்பது பொருத்தமற்றது என்பதைப் பல தரப்பினரும் சுட்டிக்காட்டுகின்றனர்**

**வருடமொன்றுக்கு, இலங்கையில் 7,000 தொன் மஞ்சள் தேவைப்படும் நிலையில், உள்நாட்டில் 3,000 தொன் மஞ்சளே உற்பத்தி செய்யப்படுகின்றது**

ஜனாதிபதி கோட்டாபயவின் அறிவிப்பையடுத்து, சில மாதங்களிலேயே சந்தைகளில் மஞ்சளுக்குத் தட்டுப்பாடு நிலவத் தொடங்கியதுடன், மஞ்சளில் கலப்படம், அதிக விலைக்கு மஞ்சளை விற்றல் போன்ற பாதக விளைவுகள் ஏற்பட்டதால், மஞ்சளுக்கான நிர்ணய விலையாக, 750 ரூபாயை அரசாங்கம் அறிவித்தது.

ஆனால், இந்த நிர்ணய விலையை மஞ்சள் வர்த்தகர்கள் சிறுதுளியேனும் கவனத்தில் எடுக்காமல், தாம் எண்ணிய விலைக்கு மஞ்சளை விற்க ஆரம்பித்துள்ளனர். இன்று, இலங்கையர்கள் கொள்வனவு செய்யும் பொருள்களில், மிக முக்கிய பொருளாக மஞ்சள் விளங்குவதால், எவ்வளவு விலை அதிகரித்து விற்றாலும் நுகர்வோர் கொள்வனவு செய்வார்கள் என்ற வரட்டு நம்பிக்கையில் வர்த்தகர்கள் மஞ்சளை அதிக விலைக்கு விற்கத் தொடங்கியுள்ளனர். வர்த்தகர்களின் எண்ணப்படியே நுகர்வோர் மஞ்சளைக் கொள்வனவு செய்தாலும், அது தூய்மையான மஞ்சளாக அன்றி, அதில் கலப்படங்களுக்கும் பதுக்கல்களுக்கும் குறைவில்லை.

நுகர்வோர் அதிகார சபைக்கு எத்தனை முறைப்பாடுகளைச் செய்தும் என்ன பயன்? அவர்களும் தமது சுற்றிவளைப்புகளை முன்னெடுத்தாலும், மஞ்சளை அதிக விலைக்கு விற்பதையும் பதுக்கி வைக்கும் நடவடிக்கையையும் வர்த்தகர்கள் கைவிடவில்லை.

நாட்டின் பிரதான நகரங்களில் உள்ள சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மஞ்சளில் பெரும்பாலானவற்றில், கோதுமை மா, கடலை மா, அரிசி மா போன்றன கலந்து விற்பனை செய்யப்பட்டுள்ளமை, நுகர்வோர் விவகார அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் நிலவும் மஞ்சள் தட்டுப்பாட்டைச் சாதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்த சட்டவிரோத பொருள்கள் கடத்தல்காரர்களின் பார்வை, மஞ்சளின் பக்கம் சென்றது.

இதற்கமைய, இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக மஞ்சள் கடத்தும் நடவடிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதாகவும் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் இந்திக டீ சில்வா தெரிவித்ததுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதிப்பதற்கு முன்னரே, முதன் முதலாக இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட 1,000 கிலோகிராம் மஞ்சளை, கடற்படையினர் கைப்பற்றியதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், ஜூலை 11ஆம் திகதியன்று சிலாபம் கடற்பரப்பில் வைத்து 6,381 கிலோகிராமும் ஜூலை 30ஆம் திகதியன்று, மன்னாரில் வைத்து 68 கிலோகிராமும் ஒகஸ்ட் 8ஆம் திகதியன்று, கற்பிட்டியிருந்து 114 கிலோகிராமும் நேற்று முன்தினம் (18) மன்னாரிலிருந்து 807 கிலோகிராமும் கைப்பற்றப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்தியாவிலிருந்து இதுவரை, படகு மூலம் கடத்தி வரப்பட்ட 8,370 கிலோகிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இவை, சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆயினும், வருடமொன்றுக்கு இலங்கையில் 7,000 தொன் மஞ்சள் தேவைப்படும் நிலையில், உள்நாட்டில் 3,000 தொன் மஞ்சளே உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்கான காரணம் காலநிலை மாற்றங்கள், வரட்சி, அதிக மழைவீழ்ச்சி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.அதேபோல், மஞ்சள் அறுவடை செய்வதற்கு ஒன்பது மாதங்கள் செல்வதுடன், மஞ்சளை உலர வைத்து, அதை தூளாக்குவதற்கும் அதிக காலம் செல்வதன் காரணமாகவே, தற்போது மஞ்சள் தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாக மஞ்சள் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கும் மஞ்சள் தட்டுப்பாட்டை இல்லாமல் செய்வதற்கு, ஒன்றரை வருடங்களுக்குத் தேவையான மஞ்சளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு, அனுமதி அளிக்கப்படுமெனத் தெரிவித்த கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர, மஞ்சளை அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஒரு கிலோகிராம் மஞ்சள் தூளை 700 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்வோருக்கு எதிராக, நுகர்வோர் அதிகார சபையின் ஊடாக, சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, நுகர்வோர் பாதுகாக்கப்படுவர் என அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனவே, உள்நாட்டில் மஞ்சள் உள்ளிட்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக, சம்பிரதாயமுறை உற்பத்தியை விட, நவீன உற்பத்தி முறைகளைப் பயன்படுத்துவதற்கு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் கடமை என்பதுடன், இவ்வாறான உற்பத்திகளுக்கு அரசாங்கத்தின் தரிசு நிலங்களை விவசாயிகள், விவசாய நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

எனினும், இவ்வாறான எந்தவொரு முன்னேற்பாடான முயற்சிகளையும் முன்னெடுக்காமல், மஞ்சள் இறக்குமதி தடை செய்யப்பட்டமை இன்றைய மஞ்சள் தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு, கடத்தல், பதுக்கல் போன்ற குற்றச் செயல்களுக்கு காரணமாக அமைகின்றது.

எனவே, இதன் பாதகத் தன்மைகளைப் பொருட்படுத்தாமல், உரிய திட்டங்களின்றி, இறக்குமதி தொடர்பான முடிவுகளை எடுப்பது பொருத்தமற்றது என்பதைப் பல தரப்பினரும் சுட்டிக்காட்டுகின்றமையும் கவனத்திற்கொள்வது அவசியமாகும்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 20 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

AUGUST 20, 2020
THURSDAY
VOL: 006/077
RS. 10.00
UPCOUNTRY ★★

Find us on facebook/tamilmirror
Follow us on tamilmirror
epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk
# தமிழ் Mirror




## 9 ஆவது நாடாளுமன்றத்தின் அங்குரார்ப்பணம்

சுதந்திரத்தின் பின்னரான 16ஆவதும் 1978ஆம் யாப்பின் கீழ் 9ஆவதுமான நாடாளுமன்றத்தின் அங்குரார்ப்பண அமர்வு, இன்று (20) முற்பகல் 9.30க்கு ஆரம்பமாகும். சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவரைத் தெரிவு செய்வது, எம்.பிக்கள் பதவிப்பிரமாணம் செய்வது மட்டுமே அமர்வில் நடைபெறும்.

இந்த அமர்வு, சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவுக்கானது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மார்ச் 2ஆம் திகதி நள்ளிரவுடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து, 2020 ஏப்ரல் 25ஆம் திகதியன்று தேர்தலை நடத்துவதற்காகத் திகதி குறித்தார். கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, அந்தத் தேர்தல் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது. அதன்பின்னர், 2020 ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று வாக்களிப்பு நடத்தப்பட்டது.




ஐந்து வருடங்களைக் கொண்ட இந்த நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கும் 225 உறுப்பினர்களும், சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பர். அது, பிரித்தானிய நாடாளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

நாடாளுமன்றத்தின் தலைமை அதிகாரியாக சபாநாயகர் இருப்பார்.



கடுமையான சுகாதார வழிகாட்டலின் கீழ், ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குப் புதிய உறுப்பினர்கள் 225 பேரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, 145 ஆசனங்களை வெற்றிகொண்டது.

**முதல் கூட்டத்தின் செயன்முறைகள்**

பொதுத் தேர்தலின் பின்னர் முதன்முறையாக சபை கூடும் நாளன்று, நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தின் ஏற்பாட்டின் பிரகாரம், உறுப்பினர்கள் உரிய நேரத்தில் கூடி, தங்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்வர்.

1. நாடாளுமன்ற அமர்வைக் கூட்டுவதற்கான ஜனாதிபதியின் பிரகடனத்தை, செயலாளர் நாயகம் வாசிப்பார்.

2. **சபாநாயகர் தெரிவு**
போதிய கோரம் இருக்குமாயின், முதலாவது கூட்டத்திலேயே, சபாநாயகரை நாடாளுமன்றம் தெரிவு செய்யும்.
சபாநாயகராக முன்மொழியப்படுபவரின் சம்மதத்தை, அங்கத்தவர் முதலிலேயே உறுதிப்படுத்த வேண்டும்.

3. சபாநாயகர் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்வர்.
சத்தியப்பிரமாணம் செய்யாத உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் அமரவோ வாக்களிக்கவோ முடியாது.



“....ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை, உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும் இலங்கையின் ஆட்புலத்துக்குள்ளாக தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு, நேரடியாகவோ மறைமுகமாகவோ, நிதி உதவவோ, ஊக்குவிக்கவோ, என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன்: சத்தியம் செய்கின்றேன்.”


4. நாடாளுமன்றத்துக்குத் தெரிவான உறுப்பினர்கள், பதவிப்பிரமாணம் செய்த பின்னர், கட்சித் தலைவர்கள் சிறிய உரையாற்றுவர்.

5. பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித்தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவர்.

6. இந்த விடயங்கள் முடிவுக்குவர, நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்படும். இதற்கான காலம், நேரம் என்பன, சபையால் தீர்மானிக்கப்படும்.

**நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சுகாதார வழிகாட்டல்கள்**

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான, கொவிட் - 19 சுகாதார வழிகாட்டல்கள், ஜுலை 31ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வழிகாட்டல்களை, சகல உறுப்பினர்களும் பின்பற்றவேண்டும். குழுக்கூட்டங்களின் போதும் பின்பற்றவேண்டும்.




நுழைவாயிலிலேயே உடல் வெப்பநிலை அளக்கப்படும்.

சுபைக்குள் நுழைய முன், கிருமி தொற்றுநீக்கியைக் கொண்டு, கைகளை நன்றாகக் கழுவவேண்டும்.

ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் மட்டுமே உறுப்பினர்கள் அமரவேண்டும்.

சபைக்குள் உறுப்பினர்கள் கடந்து செல்வதை, ஆகவும் குறைத்துக்கொள்ள வேண்டும்.




சபைக்குள் இரண்டு உறுப்பினர்கள், தங்களுக்கு இடையிலான தூரத்தை ஒரு மீற்றர் இடைவெளியில் பேணவேண்டும்.

சபைக்குள் எந்நேரமும் முகக் கவசத்தை அணிந்திருத்தல் வேண்டும். அதனைக் கழற்றவோ கீழே இறக்கவோ கூடாது. உரையாற்றும் போதும் அதனை பின்பற்ற வேண்டும்.

கட்டியணைத்து ஆறத்தழுவுதல், கைலாகு கொடுத்தல் கூடாது. வணக்கம் செலுத்தி ஒருவரையொருவர் வரவேற்கலாம்.

சொந்த உபகரணங்களான, கையடக்கச் சாதனங்கள் (Mobile devices), செவிப்பண்ணி, பேனையை பகிர்ந்துகொள்வதைத் தவிர்த்தல்.

**SLPP:** ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன **SJB:** ஐக்கிய மக்கள் சக்தி, **TNA:** தமிழ்த் தேசிய கூட்டமைப்பு , **JJB:** தேசிய மக்கள் சக்தி, **EPDP:** ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, **AITC:** அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், **TMVP:** தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், **SLFP:** ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, **MNA:** முஸ்லிம் தேசிய முன்னணி, **TMTK:** தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, **ACMC:** அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், **NC:** தேசிய காங்கிரஸ், **SLMC:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், **UNP:** ஐக்கிய தேசிய கட்சி, **OPPP:** எங்கள் சக்தி மக்கள் கட்சி.

BY PRADEEP JAYAKODY ©TM GraphicDesk




# ஐ.தே.கட்சி இன்றி முதலமர்வு கூடுகிறது

**இரண்டு ஆசனங்கள் வெற்றிடமாய் இருக்கும்**

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரை உருவாக்கிய ஐக்கிய தேசிய கட்சியில், இம்முறை எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இன்றி, புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு, இன்று (20) கூடுகிறது.

இம்முறை பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி, எந்தரோர் ஆசனத்தையும் வெல்லவில்லை. எனினும், அக்கட்சிக்கு ஒரேயொரு தேசிய பட்டியல் நியமனம்கிடைத்தது.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதி வரும்போது வேட்டுகள் தீர்க்கப்படாது; வாகனங்கள் அணிவகுக்காது

**3 மணிக்கு உரை; கலாசார நடனமாடி வரவேற்பர்**



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும். அதன்பின்னர், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை அவர் நிகழ்த்துவார்.

முதலாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைப்பதற்காக, ஜனாதிபதி வருகைதரும்போது,

தொடர்ச்சி P2

# 19 ஐ திருத்த அனுமதி



**20ஆவது சட்ட வரைபுக்கு அங்கிகாரம்**
**ஐவர் கொண்ட அமைச்சரவை துணைக்குழு நியமனம்**

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தைத் திருத்துவதற்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று 19ஆம் திகதி கூடிய முதலாவது அமைச்சரவை, அனுமதி அளித்துள்ளதுடன், 20ஆவது சட்டவரைபைத் தயாரிப்பதற்கு அங்கிகாரமளித்துள்ளது.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (19) நடைபெற்றது. இதில், அரசமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தம், அடுத்த ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதிக்குரிய செலவுகளை ஈடுசெய்வதற்கான முறைமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தொடர்ச்சி P2

10,000 பேருக்கு வேலைவாய்ப்பு;
# ‘வெயிலிலே காயாமல் வீட்டுக்குச் செல்லுங்கள்’

**பவ்வியமாய் கூறி அனுப்பினார் ஜனாதிபதி**



கொழும்பு - கோட்டை ஜனாதிபதிச் செயலகத்துக்கு முன்பாக, கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் வேலையற்ற பட்டதாரிகள், நேற்று (19) நண்பகல் கடும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

# கலந்துரையாடல்



தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இடையில், அமைச்சரின் அலுவலகத்தில், நேற்று (19), கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# மூடப்படாத மாணிக்கக்கல் குழிகளால் உயிராபத்து

■ சதீஸ்



பொகவந்தலாவ - சீனாகலை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மூடப்படாத பாரிய மாணிக்கக்கல் குழிகளால் உயிராபத்து ஏற்படும் நிலைமை அதிகரித்துள்ளதாக, பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தொடர்ச்சி P2




மீரியபெத்த மண்சரிவு;
# 132 குடும்பங்களுக்கு புதிய வீடுகள்

மீரியபெத்த மண்சரிவு இடம்பெற்ற பகுதிக்கு அருகில் வசித்துவரும் 132 குடும்பங்களுக்கு, புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தை, ஹல்துமுல்ல அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P2



வயல், சதுப்பு நிலங்களை
# ‘மண்போட்டு மூடவேண்டாம்’



■ மொஹொமட் ஆஸிக்

வயல் காணிகளும் சதுப்பு நிலங்களும், கடந்த காலங்களில் மண்போட்டு நிரப்பப்பட்டு, மண் தரையாக்கப்பட்டுள்ளமையால், உயிரியல் பல்வகைமை சுற்றாடலுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாக,

தொடர்ச்சி P2

# ‘இரத்தினபுரிக்கு விரைவில் தமிழ் தேசிய பாடசாலை’

**கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அறிவிப்பு**

பலாங்கொடை கனகநாயகம் தமிழ் மகா வித்தியாலயத்தை மிக விரைவிலேயே தமிழ்த் தேசிய பாடசாலையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் அகிலசாலிய எல்லாவல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எம்.பிக்கான வரப்பிரசாதங்களை
# திருப்பிக் கொடுத்தார் திலகர்



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ், தனது நாடாளுமன்ற பதவிக் காலத்தில் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பதவி அடையாள அட்டை, விசேட பிரமுகர்களுக்கான வாகன அனுமதிப்பத்திரம், மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர் குடியிருப்பு ஒப்பந்தம், நாடாளுமன்ற உறுப்பினருக்காக வழங்கப்பட்ட எஞ்சிய காகிதாதிகள் ஆகியவற்றை, நாடாளுமன்ற உறுப்பினர் சேவை பிரிவினருக்கு திருப்பிக் கையளித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஐ.தே.கட்சி இன்றி முதலமர்வு கூடுகிறது

கிடைத்தது. அதற்காக, உத்தியோகபூர்வமாக எவரது பெயரும் இதுவரையிலும் பரிந்துரைக்கப்பட்டு, தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. லங்கா தேசிய சங்கம், சிங்கள மகா சபை, முஸ்லிம் சங்கம் ஆகியன இணைந்தே, 1946 செப்டெம்பர் 6ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சி உருவாக்கப்பட்டது. டீ.எஸ். சேனாநாயக்கவின் தலைமையில், அக்கட்சி 1947ஆம் ஆண்டு முதன்முறையாகப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. அன்றிருந்த 95 ஆசனங்களில் 42 ஆசனங்களை வென்று ஆட்சியமைத்தது.

அவ்வாறான வரலாற்றைக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து, ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குத் தேர்தலின் ஊடாக ஒருவரேனும் தெரிவு செய்யப்படவில்லை. எனினும், ஒரு தேசியபட்டியலுக்கு இடம் கிடைத்துள்ளது.

இதேவேளை, எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு, தேசியபட்டியலின் ஊடாகக் கிடைத்துள்ள ஆசனமும் நேற்றுவரையிலும் நிரப்பப்படவில்லை. "அவ்விரண்டு ஆசனங்களுக்கு உரியவர்களின் பெயர்கள், வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்படாமையால், அவ்விருவரின் ஆசனங்களும் இன்று (20) வெற்றிடமாக இருக்கும்" என, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

# 19 ஐ திருத்த அனுமதி

நேற்றைய முதலாவது கூட்டத்தில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் சகலரும் பங்கேற்றிருந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அமைச்சரவைக்குள் புதிதாக உள்வாங்கப்பட்ட அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ, உதய கம்மன்பில, அலி சப்ரி ஆகியோருக்கு அமைச்சரவை, வாழ்த்துகளைத் தெரிவித்துகொண்டதென அறியமுடிகின்றது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குவது தொடர்பான பத்திரமொன்று, அமைச்சரவைக்குக் கையளிக்கப்பட்டது" என, நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். இதேவேளை, 2020ஆம் ஆண்டுக்கான மீதமுள்ள மாதங்களுக்கான அரச நிதியை ஒதுக்கும் இடைக்காலக் கணக்கறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் நேற்றைய அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. இந்நிலையில், அரசமைப்பைத் தயாரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, அமைச்சரவை துணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதில், அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா, அலி சப்ரி, தினேஸ் குணவர்தன, உதய கம்மன்பில ஆகியோர் அடங்குகின்றனர்.

# திருப்பிக் கொடுத்தார் திலகர்

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் முதன்முறையாக தேர்தலில் களம் இறங்கி 67,761 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி இருந்த இவர், ஐந்து ஆண்டு கால செயற்பாடுகள் அடிப்படையில் நுவரெலியா மாவட்டத்தில் முதலாம் இடத்திலும் ஒட்டுமொத்த 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 29 ஆவது இடத்திலும் வரிட்டே ரிசேச் நிறுவனம் நடத்தும் மந்த்ரி. lk இணையத்தளத்தால் தரப்படுத்தப்பட்டு சான்றிதழ் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டு இருந்தார்.

இந்த 2020 பொதுத்தேர்தலில் அவருக்கு நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட வாய்ப்பு அளிக்காத நிலையில் அவரை தேசிய பட்டியல் உறுப்பினராக்க பிரேரிக்கப்பட்டு இருந்தபோதும் அந்த வாய்ப்பும் மறுக்கப்பட்டது. இதனை அடுத்து தான்சார்ந்த கட்சி மற்றும் கூட்டணி ஆகியவற்றின் சகல பொறுப்புகளையும் துறந்ததோடு நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்ட சகல வரப்பிரசாதங்களையும் மீளவும் கையளித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இலங்கையில் 'தூய அரசியல் கலாசாரத்தை' உருவாக்கும் நோக்கிலான 'மார்ச்12' மக்கள் இயக்கத்தில் செயற்பாட்டு உறுப்பினரான இவர், அந்த 'March 12 Movement' இயக்கத்தின் இணையத்தளங்களில் தனது சொத்துப் பொறுப்பு விவரங்களை வெளியிட கைச்சாத்திட்டு அனுமதி வழங்கி இருந்தார்.

தாம் கட்சி, கூட்டணியில் இருந்து ஒதுங்கினாலும் அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதில்லை என்றும் புதிய கட்சியை உருவாக்கவோ மாற்றுக் கட்சியில் இணையவோ போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முதல் இதே ஒகஸ்ட் 19 ஆம் திகதி இவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'இரத்தினபுரிக்கு விரைவில் தமிழ் தேசிய பாடசாலை'

பலாங்கொடை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் மற்றும் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்களில், நேற்று (18) முன்தினம் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டதன் பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்துரைத்த அவர், பொதுத் தேர்தலில் பலாங்கொடை தொகுதியிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் அதிளவில் தனக்கு வாக்குகளை அளித்ததால், 26 வருடங்களுக்குப் பிறகு பலாங்கொடை தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வாய்ப்பு தனக்கு கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

தனக்கு வாக்களித்த சிறுபான்மை மக்கள, தான் பாராட்டிக் கௌரவிப்பதுடன் அவர்களது தேவைகளை எதிர்வரும் காலங்களில் இனம்கண்டு பூர்த்திசெய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்..

"தேர்தல் காலங்களில் இப்பகுதி தமிழ் மக்கள் என்னிடம் பல கோரிக்கைகளை முன்வைத்தனர். அவற்றில் பலாங்கொடை கனகநாயகம் தமிழ் மகா வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தி தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அவர்களது கோரிக்கையை மிக விரைவில் பூர்த்தி செய்துகொடுக்க நடவடிக்கை எடுப்பேன்" எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி வரும்போது வேட்டுகள் தீர்க்கப்படாது: வாகனங்கள் அணிவகுக்காது

தீர்க்கப்பட்டு, வாகன அணிவகுப்பு இடம்பெறும். இம்முறை அவையாவும் இடம்பெறாது. ஜனாதிபதியை வரவேற்கும் முகமாக, நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் முப்படையினரின் பங்களிப்புடனான கலாசார நடனம் இடம்பெறும்.

முதலில், பிற்பகல் 2.15க்கு விருந்தினர்களின் வருகை இடம்பெறும். அதன்பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகைதருவர், சபாநாயகர் வருகையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வருகையும் இடம்பெறும்.

அதன்பின்னர், ஜனாதிபதி சபைக்குள் அழைத்துச் செல்லப்படுவார். இதன்போது நாடாளுமன்றத்தின் பிரதான வாயிலின் அருகில், கொழும்பு தேவி பாலிகா வித்தியாலய மாணவியரால் ஜயமங்கள கீதம் இசைக்கப்படும்.

# 132 குடும்பங்களுக்கு புதிய வீடுகள்

இந்த 132 குடும்பங்களுக்குமான புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக, அருகிலுள்ள பெருந்தோட்டமொன்றில் காணி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் தேசிய இடர்முகாமைத்துவப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தில், வீடொன்றுக்கு 12 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் பதுளை மாவட்ட அரசாங்க அதிபர் தமயந்தி பரணகமவின் உத்தரவுக்கமை, ஹல்துமுள்ளை பிரதேச செயலாளர் சுனேத் ஜினேந்திரசேனவின் வழிநடத்தலில், இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதியன்று ஏற்பட்ட மீரியபெத்த மண்சரிவு அனர்த்தத்தில், 37 பேர் பலியானதுடன், 75 குடியிறுப்புகள் சேதமடைந்தன. பாதிக்கப்பட்டவர்களுக்கான புதிய வீடுகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள நிலையிலே, இப்பகுதிக்கு அருகில் வசித்துவருபவர்களுக்கும் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

# 'வெயிலிலே காயாமல் வீட்டுக்குச் செல்லுங்கள்'

முதலாவது அமைச்சரவைக் கூட்டமும் ஜனாதிபதி செயலகத்தில், நேற்றுக்காலை 9.30 மணிமுதல் ஆரம்பமாகி, நடைபெற்றது. அமைச்சரவைக் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர், தனது வாகனத்தில் சென்றுகொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளுடன் வாகனத்தில் இருந்தவாறே உரையாடினார். இதன்போது, ஜனாதிபதிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கேள்வி பதில்களுடன் கூடிய சுவாரஷ்யமான சம்பாஷனையும் இடம்பெற்றது.

ஜனாதிபதி: இன்று (நேற்று) கூடிய முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே, 10ஆயிரம் பேருக்கு (வேலையற்ற பட்டதாரிகளுக்கு) வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகரித்தது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர்: எங்களுக்கு 45 வயதுக்கு மேல் ஆகிறது சேர்.

ஜனாதிபதி: 45 வயதுக்கு மேற்பட்டவர்கள், இதுவரையிலும் என்ன செய்தீர்கள்?

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர்: எட்டு வருடங்கள் நாங்கள் வீட்டில் இருந்தோம்; கடந்த ஆட்சியிலேயே எங்களுடைய வயது சென்றுவிட்டது. எங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவில்லை சேர்.

ஜனாதிபதி: சரி, சரி நாங்களும் வேலை செய்திருக்கின்றோம். (ஆர்ப்பாட்டக்கார்களில் ஒருவரைப் பார்த்து) உங்களுக்கு 45 வயதாக இருக்கமுடியாது?

அந்த ஆர்ப்பாட்டக்காரர்: எனக்கு 38 வயதாகிறது சேர்.

ஜனாதிபதி: அப்படியாயின் என்ன பிரச்சினை

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர்: எங்களுடைய பெயர் வெட்டப்பட்டுள்ளது சேர்.

ஜனாதிபதி: அச்சப்படாதீர்கள்! எல்லோருக்கும் வேலைவாய்ப்புத் தருவேன். மேலும், 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்தது. ஆகையால், வெயிலிலே காயாமல் எல்லோரும் வீட்டுகளுக்குச் செல்லுங்கள்.

ஜனாதிபதி இவ்வாறு கூறிவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களும் சில நிமிடங்களில், தங்களுடைய ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுவிட்டு, அங்கிருந்து கலைந்துசென்றுவிட்டனர்.

# மூடப்படாத மாணிக்கக்கல் குழிகளால் உயிராபத்து

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில், தேசிய இரத்தினக்கல், தங்க ஆபரணங்கள் அதிகார சபையால், மேற்படி பகுதியில் மாணிக்கக்கல் அகழ்வதற்கு இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த காலம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள போதிலும் மேற்படி பகுதியில் தோண்டப்பட்ட மாணிக்கக்கல் குழிகள் இதுவரை மூடப்படவில்லை என்றும் இதனால் பிரதேச மக்கள் உயிரச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

> **"ஒப்பந்த காலம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள போதிலும் மேற்படி பகுதியில் தோண்டப்பட்ட மாணிக்கக்கல் குழிகள் இதுவரை மூடப்படவில்லை**

> **"இது தொடர்பில் புதிய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்**

மேற்படி பகுதியில் மாத்திரம், சுமார் 48 மாணிக்கக்கல் குழிகள் தோண்டப்பட்டு இருக்கின்றன என்றும் குழிகளில் நீர்நிரம்பியுள்ளதுடன், அவை மாசடைந்த நிலையில் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

நீர்நிரம்பியுள்ளதால் குழிகள் எங்கிருக்கின்றன என்பதைக் கண்டறியமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுரங்கக் குழிகள் மூடப்படாமையால், கால்நடை வளர்ப்பாளர்கள் பின்னவலை மாரத்தென்ன போன்ற பகுதிகளுக்குச் சென்று கால்நடைகளுக்குத் தேவையான புற்களை வாகனங்களில் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனாகலை பகுதியில் காணப்படுகின்ற சுரங்கக் குழிகள் மூடப்பட்டால் கால்நடைகளுக்குத் தேவையான புற்களை குறித்தப் பகுதியிலேயே பெற்றுக்கொள்ள முடியும் என்று கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

எனவே இது தொடர்பில் புதிய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 'மண்போட்டு மூடவேண்டாம்'

தேசிய வனப்பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் அதீக் நசீர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், இவ்வாறு சதுப்பு நிலங்கள் தரைக்காணிகளாக மாற்றப்பட்டுள்ளமையால், நத்தை, ஊர்வன, சதுப்பு நில மீன்கள், வண்ணாத்திப்பூச்சி, நீர்நிலைகளை அண்டிவாழும் கொக்கி, மீன்கொத்தி ஆகியவை அருகி வருவதாக அவர் கூறினார். அத்துடன், இதன்காரணமாக, சுற்றாடலின் வெப்பநிலை அதிகரித்து வருவதாகவும் இதனால், சுற்றாடலில் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, தற்போது ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கம், சதுப்பு நிலங்களையும் வயல்காணிகளையும் மண்போட்டு நிரப்புவதை தடுத்து, சுற்றாடலை பேணவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கலந்துரையாடல்

இராஜாங்க அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது, மனித வள அபிவிருத்தி நிதியத்தின் கீழ், கடந்த ஆட்சி காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், அதன் குறைபாடுகள், வீடுகள் கையளிக்கப்பட்டுள்ள உள்ளிட்ட பல வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம், அதிகாரிகள் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்தனர். இந்நிலையில், இந்த நிதியத்தின் கீழ் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொர்பில் விரைவில் கலந்துரையாடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சபாநாயகர் யாப்பா:
# பிரதி சபாநாயகர் ரஞ்சித்



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நியமிப்பதற்கு, ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, பிரதி சபாநாயகராக கேகாலை மாவட்ட, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை நியமிப்பதற்கும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரிமாளிகையில் நேற்று (19) மாலை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை இணை பேச்சாளர்கள் நியமனம்



புதிய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளராக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வல நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், அமைச்சரவை இணைப் பேச்சாளர்களாக அமைச்சர்களான உதய கம்மன்பில, ரமேஷ் பத்தரண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று (19) நடைபெற்றது. இதன்போதே, மேற்கண்ட நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சோளப் பயிர்ச்செய்கை

# ‘மீளவும் கட்டியெழுப்பப்படும்’

இக்பால் அலி

நல்லாட்சி அரசாங்கத்தின் நான்கரை ஆண்டுகால ஆட்சி, காலத்தில், இந்நாட்டில் சோளப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்துவிட்டதாகத் தெரிவித்த கால்நடை வளங்கள், பண்ணை மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத், சோளச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் இல்லாமற் செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு, வாரியபொலவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்துரைத்த அவர், உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல், உள்ளூர் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் ஆட்சிக் காலத்திலேயே, நாட்டில் சோள உற்பத்தி, சக்திமிக்கதாகக் கட்டி எழுப்பப்பட்டது என்றும் இலங்கையில் இருந்து சோளத்தைத் தாய்லாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். எனினும், கடந்த நான்கரை வருட ஆட்சியில் சோள உற்பத்தி வீழ்ச்சியடைந்ததாகவும் தெரிவித்தார்.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் சிறந்த வழிகாட்டலுடன் சோளப் பயிர்ச் செய்கை மீண்டும் சிறந்தமுறையில் கட்டி எழுப்பப்படும் என்றும் வெளிநாடுகளுக்கு சோளம் ஏற்றுமதி செய்வதைத் தவிர்த்து இலங்கையில் முட்டை உற்பத்தியாளர்கள் பயன்படுத்தும் கோதுமை உற்பத்திகளை இலங்கையிலேயே மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

சோளப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்குத் தேவையான வரப்பிரசாதங்களை விவாயிகளுக்குப் பெற்றுப்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் முட்டை உண்போரின் வீதம் அதிகரித்துள்ளதாகவும் நாளொன்றுக்கு 80 இலட்சத்தில் இருந்து 90 இலட்சம் வரையிலான முட்டைகள் நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.







# பிரியாவிடை...

மெய்யன்

கண்டி வத்தேகம கல்வி வலயத்துக்கு உட்பட்ட பன்விலை விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் பொன் இராஜகோபால், அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து, அவருக்கான பிரியாவிடை வைபவத்தை பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

























# கல்விச் சேவையிலிருந்து ஓய்வு

மெய்யன்

பன்வில பிரதேசத்தில், பன்முக ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்து, கல்விப்புலத்துக்கு காத்திரமான பங்களிப்புச்செய்த மூத்த அதிபர் பொன்னையா இராஜகோபால், தனது 34 வருட கல்விப் பணியிலிருந்து, இம்மாதம் 10ஆம் திகதி ஓய்வுபெற்றார்.

1986ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி, ஆசிரியர் கடமையை ஆரம்பித்த அவர், கலாபொக்க வட்டகல தோட்டத்தில், பாடசாலைக் கட்டடமே இல்லாத சந்தர்ப்பத்தில், பிரதேச கோவிலில் கற்பித்தல் பணியை ஆரம்பித்து தலைமை ஆசிரியராகத் திகழ்ந்தார்.

பின்னர், கலாபொக்க அபிராமி தமிழ் வித்தியாலயத்துக்கு மாற்றம் பெற்றுச் சென்று அதிபராகக் கடமையாற்றிய அவர், யாழ்ப்பாணம் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் சைவ சமய ஆசிரியராகப் பயிற்சியைப் பூர்த்திசெய்து கொண்டார்.

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் ஹட்டன் எபோட்ஸ்லி தமிழ் வித்தியாலயத்திலும் தொடர்ந்து தனது ஆசிரிய பணியை மேற்கொண்டு, கண்டி - தவலந்தன்ன, கந்த கட்டிய தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய இவர், நாடகமும் அரங்கியலும் பிரிவில், 25 மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி, கல்விப்புலத்துக்கு காத்திரமான பங்களிப்பை நல்கியுள்ளார்.

இப்பாடசாலைக்கு, 2015 தொடக்கம் 2017ஆம் ஆண்டுவரை, தொடர்ந்து தேசிய நிலை தேசிய உற்பத்தித்திறன் போட்டிகளில் 3 விருதுகளையும் மாகாண ரீதியில் ஒரு விருதையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.



வத்துகாமம் கல்வி வலயத்தில், கணிதபாட மற்றும் தேசிய உற்பத்தி திறன் இணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

பன்வில விக்னேஸ்வரா விஞ்ஞான பாடசாலையில், அதிபராகப் பொறுப்பேற்றதன் பின்னர், உயர்தரப் பிரிவை ஆரம்பித்ததோடு பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுப்பியுள்ள அதேவேளை, தேசிய உற்பத்தித் திறன் செயலகம் நடத்திய பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் மாகாண ரீதியாகப் பாடசாலைக்கு விருதைப் பெற்றுக் கொடுத்தார்.

இவர், சுமார் 3 மேடை நாடகங்களை தயாரித்துத் தாமே மேடையேற்றியுள்ளதோடு, ஆன்மிகத்துறையிலும் கலைத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராவார். நாட்டுப்புறவியல் தொடர்பான ஆய்வில், பாண்டிச்சேரி பல்கலைக்கழக முனைவர் கோபியுடன் இணைந்துப் பணியாற்றியுள்ளதோடு, சிறந்த பண்பாளராக வத்தேகம பிரதேசத்தில் திகழ்ந்து, கல்விப் புலத்தோரின் பெரும் நன்மதிப்பைப்பெற்று பாடசாலை சமூகத்தாலும் பெற்றோர்களாலும், பழைய மாணவர்களாலும் உணர்வுபூர்வமான நன்றியறிதலுக்கு பாத்திரமாகக் காணப்படுகிறார்.

பன்வில பிரதேசத்தில் முன்னோடி அதிபராகத் திகழ்ந்து கடந்த 34 வருடங்களாக பிரதேச கல்வி வளர்ச்சியில் முன்னின்றுச் செயற்பட்டுள்ளார். அதிபர் சேவையில் இரண்டாம் தரத்திலுள்ள இவர், பன்விலை விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில், 2017.08.04ஆம் திகதி முதல் அதிபராகக் கடமையாற்றிய நிலையில், 2020.08.10ஆம் திகதி ஓய்வுபெற்றார்.

# கேரள கஞ்சாவுடன் நால்வர் கைது



எஸ்.கணேசன், எம்.கிருஸ்ணா, எஸ். சதீஸ், மொஹொமட் ஆஸிக்

நாவலப்பிட்டி நகர பகுதியில், விற்பனைக்காக வைத்திருந்த ஒரு தொகை கேரளா கஞ்சாவுடன், நால்வரை நாவலப்பிட்டி குற்றத்தடுப்பு பொலிஸார், நேற்று முன்தினம் மாலை கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே, பொலிஸார் மேற்படி நால்வரையும் கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து, 34,500 ரூபாய் பணமும் மீட்கப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள், நீண்ட காலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று, பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நால்வரையும், நாவலப்பிட்டி நீதவான் முன்னிலையில் ஆஜப்படுத்தவுள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நினைவுச் சின்னம் வழங்கல்



இக்பால் அலி

மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரனவீர, இடமாற்றம் பெற்றுச்செல்லும் நிலையில், கண்டி மக்களுக்கு அவர் செய்த சேவையைப் பாராட்டி, நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு, மத்திய மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றது.

கண்டி முஸ்லிம் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் இணைந்து, இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

கண்டி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி பஸ்லுர் ரஹ்மான் தலைமையில், சிவில் அமைப்பின் பிரதிநிதிகளான அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவையின் தேசிய தலைவர் சஹீத் எம்.ரிஸ்மி, கண்டி மஸ்ஜித் சம்மேளன தலைவர் கே.ஆர்.ஏ.சித்தீக், அகில இலங்கை மொத்த வியாபார சங்கத் தலைவர் டபிள்யூ.எம்.நாஜிம், கண்டி வர்த்தக சங்க பிரதிநிதி ஐ.அலிகான், கண்டி சிக்ஸ் வை தலைவர் ஏ.எஸ்.எம்.கஸ்ஸாலி ஆகியோர் இணைந்து, நினைவுச் சின்னத்தை வழங்கினர்.

பேராதனைப் பல்கலைக்கழக

# நூலகராக மகேஸ்வரன் நியமனம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 8ஆவது கல்விசார் நூலகராக இராசையா மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இராசையா மகேஸ்வரன், 1984ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைகழகத்தின் மாணவராகச் சேர்ந்து, புவியியற்றுறையில் சிறப்புக் கற்கை நெறியில் பட்டதாரியானார். 1994ஆம் ஆண்டு கல்விசார் உதவி நூலகராக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்தார். 2001ஆம் ஆண்டு கொழும்பு பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் நூலக தகவல் தொழில் நுட்ப முதுமானி பட்டத்தைப் பெற்று கல்விசார் சிரேஷ்ட நூலகராக பதவி உயர்ந்தார்.

2007ஆம் ஆண்டு கல்விசார் முதுநிலை நூலகராக பதவிபெற்று, 2011ஆம் ஆண்டு இணை பேராசிரியருக்கு சமனான பிரதி நூலகராக பதவி உயர்வு பெற்றார். 2015 தொடக்கம் பதில் நூலகராக நூலகத்தை பொறுப்பேற்று ஐந்து வருடங்களாகக் கடமையாற்றி வந்தார்.

மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு

# பணப்பரிசு அன்பளிப்பு

ஏ.ஏ.எம் பாயிஸ்


இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அகில சாதிய எல்லாவலவுக்கு, இதுவரை அவர் உறுப்பினராகக் கடமையாற்றிய பலாங்கொடை நகரசபையில், நேற்று முன்தினம் பிரியாவிடை நடத்தப்பட்டது.

பலாங்கொடை நகரசபைத் தலைவர் சாமிக்க வெவேகெதர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நகரசபை உறுப்பினர்கள், நகரசபை ஊழியர்கள் கலந்துகொண்டனர். இதன்போது புதிய நாடளுமன்ற உ றுப்பினருக்கு, நினைவுச் சின்னமும் பணப்பரிசும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. எனினும், நினைவுச் சின்னத்தைப் பெற்றுக்கொண்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர், தன்னிடம் கையளித்த பணப்பரிசை, பிரதேச மாணவர்களின் கல்வி நலன்களுக்காகப் பயன்படுத்துமாறு கோரி பணப் பரிசை மீண்டும் நகர சபைத் தலைவரிடமே கையளித்தார்.

AUGUST 20, 2020
THURSDAY
VOL: 006/077
RS. 10.00
LATE CITY ★


Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk




# 19 ஐ திருத்த அனுமதி

## 20ஆவது சட்ட வரைபுக்கு அங்கிகாரம்; ஐவர் கொண்ட அமைச்சரவை துணைக்குழு



அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தைத் திருத்துவதற்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையில் நேற்று 19ஆம் திகதி கூடிய முதலாவது அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதுடன், 20ஆவது சட்டவரைபைத் தயாரிப்பதற்கு அங்கிகாரமளித்துள்ளது.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம், ஜனாதிபதி செயலகத்தில், நேற்று (19) நடைபெற்றது. இதில், அரசமைப்பில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தம், அடுத்த ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதிக்குரிய செலவுகளை ஈடுசெய்வதற்கான முறைமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி வரும்போது

# வேட்டுகள் தீர்க்கப்படாது: வாகனங்கள் அணிவகுக்காது

## 3 மணிக்கு உரை: கலாசார நடனமாடி வரவேற்பர்



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவால் இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்படும். அதன்பின்னர், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை அவர் நிகழ்த்துவார்.

தொடர்ச்சி P2

# ‘13க்கு சேதாரம் ஏற்படாது’



அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தேவையற்ற குழப்பங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமாகக் கருத்துகள் வெளியிடப்பட்டு வருவதாக விசனம் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவ்வாறான நோக்கங்கள் எதுவும் புதிய அரசாங்கத்துக்குக் கிடையாது என்றார்.

“அத்துடன், உண்மைக்குப் புறம்பான கருத்துகளை வெளியிட்டு, மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பங்களை யாரும் மேற்கொள்ள வேண்டாம்” எனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

10,000 பேருக்கு வேலைவாய்ப்பு:

# ‘வெயிலிலே காயாமல் வீட்டுக்குச் செல்லுங்கள்’

## பவ்வியமாய் கூறி அனுப்பினார் ஜனாதிபதி



கொழும்பு, கோட்டை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் வேலையற்ற பட்டதாரிகள், நேற்று (19) நண்பகல் கடும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலாவது அமைச்சரவைக் கூட்டமும் ஜனாதிபதி செயலகத்தில், நேற்றுக் காலை 9.30 மணிமுதல் ஆரம்பமாகி, நடைபெற்றது. அமைச்சரவைக் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர்,

தொடர்ச்சி P2

# சபாநாயகர் யாப்பா: பிரதி சபாநாயகர் ரஞ்சித்



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நியமிப்பதற்கு, ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, பிரதி சபாநாயகராக, கேகாலை மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை நியமிப்பதற்கும்

தொடர்ச்சி P2

# ஐ.தே.கட்சி இன்றி முதலமர்வு கூடுகிறது

## இரண்டு ஆசனங்கள் வெற்றிடமாய் இருக்கும்

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரை உருவாக்கிய ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இன்றி, புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு, இன்று (20) கூடுகிறது.

இம்முறை பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி, எந்தவோர் ஆசனத்தையும் வெல்லவில்லை. எனினும், அக்கட்சிக்கு ஒரேயொரு தேசியபட்டியல் நியமனம் கிடைத்தது. அதற்காக,

தொடர்ச்சி P2

ரூ.60 ஆயிரம் இலஞ்சம்;

# இ.போ.ச முகாமையாளருக்கு விளக்கமறியல்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

இலங்கை போக்குவரத்துச் சபையின், வட பிராந்திய முகாமையாளர், 60 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாகப் பெற்றபோது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால் மன்னாரில் வைத்து, நேற்று (19) காலை கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மன்னார் போக்குவரத்து டிப்போவுக்கு பின் பகுதியில் வைத்து, இலஞ்சம் பெற்ற போது, அதிரடியாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார். முறைப்பாடு ஒன்றை,

தொடர்ச்சி P2

# ‘ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் மாற்றம் இல்லை: RTI நீக்கப்படாது’

■ பா. நிரோஸ்



அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் மாற்றங்கள் மேற்கொள்ள ப்படமாட்டாதெனத் தெரிவித்த அமைச்சரவையின் இணைப் பேச்சாளர்களில் ஒருவரான அமைச்சர் உதய கம்மன்பில, தகவலறியும் உரிமைச் சட்டத்தை, புதிய அரசாங்கம் நீக்க முயற்சிக்காது என்றார். தொடர்ச்சி P2

புறப்பட்ட பிள்ளையான்

# வெலிக்கடையில் இரவைக் கழித்தார்

## சொக்கா மல்லியும் வருகிறார்

■ வ. சக்தி, கே.எல்.ரி. யுதாஜித்



நீண்ட நாள்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட, பிள்ளையான்’ என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், கொழும்புக்கு நேற்று (19) அழைத்துவரப்பட்டார்.

இன்றைய முதலாவது நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்கான அனுமதியை, மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் (18) வழங்கியிருந்தது. அதனடிப்படையில், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து நேற்றுக்காலை அழைத்துவரப்பட்டார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிறைச்சாலையில் இருந்த வண்ணமே,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# 19ஐ திருத்த அனுமதி



நேற்றைய முதலாவது கூட்டத்தில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் சகலரும் பங்கேற்றிருந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அமைச்சரவைக்குள் புதிதாக உள்வாங்கப்பட்ட அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ, உதய கம்மன்பில, அலி சப்ரி ஆகியோருக்கு அமைச்சரவை, வாழ்த்துகளைத் தெரிவித்துகொண்டதென அறியமுடிகின்றது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குவது தொடர்பான பத்திரமொன்று, அமைச்சரவைக்குக் கையளிக்கப்பட்டது" என, நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இதேவேளை, 2020ஆம் ஆண்டுக்கான மீதமுள்ள மாதங்களுக்கான அரச நிதியை ஒதுக்கும் இடைக்காலக் கணக்கறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் நேற்றைய அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இந்நிலையில், அரசமைப்பைத் தயாரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, அமைச்சரவை துணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதில், அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா, அலி சப்ரி, தினேஸ் குணவர்தன, உதய கம்மன்பில ஆகியோர் அடங்குகின்றனர்.

# '13க்கு சேதாரம் ஏற்படாது'

19ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த, அரசாங்கம் முயற்சிப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் இந்தியாவின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தையும் இல்லாமல் செய்வதற்கு, புதிய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகச் சில தரப்புகளால் கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்ற நிலையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"புதிய அரசாங்கம் தொடர்பில், தமிழ் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி, அதனூடாக அரசியல் நலன்களை

**" புதிய அரசாங்கம் தொடர்பில், தமிழ் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் குறுகிய நலன் கொண்ட அரசியல் தரப்புகளே, இவ்வாறான உண்மைக்குப் புறம்பான கருத்துகளைப் பரப்பிவருகின்றன**

அடைந்து கொள்ள முயற்சிக்கும் குறுகிய நலன் கொண்ட அரசியல் தரப்புகளே, இவ்வாறான உண்மைக்குப் புறம்பான கருத்துகளைப் பரப்பிவருகின்றன" எனக் குற்றஞ்சாட்டினார்.

மேலும், இவ்வாறான அடிப்படையற்ற கருத்துகள் தொடர்பில் மக்கள் பதற்றமடையத் தேவையில்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஐ.தே.கட்சி இன்றி முதலமர்வு கூடுகிறது

**" 1946 செப்டெம்பர் 6ஆம் திகதி ஐ.தே.க உருவாக்கப்பட்டது. டீ.எஸ். சேனாநாயக்கவின் தலைமையில், அக்கட்சி 1947ஆம் ஆண்டு முதன்முறையாகப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. அன்றிருந்த 95 ஆசனங்களில் 42 ஆசனங்களை வென்று ஆட்சியமைத்தது**

உத்தியோகபூர்வமாக எவரது பெயரும் இதுவரையிலும் பரிந்துரைக்கப்பட்டு, தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

லங்கா தேசிய சங்கம், சிங்கள மகா சபை, முஸ்லிம் சங்கம் ஆகியன இணைந்தே, 1946 செப்டெம்பர் 6ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சி உருவாக்கப்பட்டது. டீ.எஸ். சேனாநாயக்கவின் தலைமையில், அக்கட்சி 1947ஆம் ஆண்டு முதன்முறையாகப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. அன்றிருந்த 95 ஆசனங்களில் 42 ஆசனங்களை வென்று ஆட்சியமைத்தது.

அவ்வாறான வரலாற்றைக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து, ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குத் தேர்தலின் ஊடாக ஒருவரேனும் தெரிவு செய்யப்படவில்லை. எனினும், ஒரு தேசியபட்டியலுக்கு இடம் கிடைத்துள்ளது.

இதேவேளை, எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு, தேசியபட்டியலின் ஊடாகக் கிடைத்துள்ள ஆசனமும் நேற்றுவரையிலும் நிரப்பப்படவில்லை.

"அவ்விரண்டு ஆசனங்களுக்கு உரியவர்களின் பெயர்கள், வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்படாமையால், அவ்விருவரின் ஆசனங்களும் இன்று (20) வெற்றிடமாக இருக்கும்" என, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

# வேட்டுகள் தீர்க்கப்படாது: வாகனங்கள் அணிவகுக்காது

முதலாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைப்பதற்காக, ஜனாதிபதி வருகைதரும்போது, மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டு, வாகன அணிவகுப்பு இடம்பெறும். இம்முறை அவையாவும் இடம்பெறாது. ஜனாதிபதியை வரவேற்கும் முகமாக, நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் முப்படையினரின் பங்களிப்புடனான கலாசார நடனம் இடம்பெறும்.



முதலில், பிற்பகல் 2.15க்கு விருந்தினர்களின் வருகை இடம்பெறும். அதன்பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகைதருவர், சபாநாயகர் வருகையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வருகையும் இடம்பெறும்.

அதன்பின்னர், ஜனாதிபதி சபைக்குள் அழைத்துச் செல்லப்படுவார். இதன்போது நாடாளுமன்றத்தின் பிரதான வாயிலின் அருகில், கொழும்பு தேவி பாலிகா வித்தியாலய மாணவியரால் ஜயமங்கள கீதம் இசைக்கப்படும்.

# 'வெயிலிலே காயாமல்...

தனது வாகனத்தில் சென்றுகொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட, பட்டதாரிகளுடன் வாகனத்தில் இருந்தவாறே உரையாடினார்.

இதன்போது, ஜனாதிபதிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கேள்வி பதில்களுடன் கூடிய சுவாரஸ்யமான சம்பாஷனையும் இடம்பெற்றது.

ஜனாதிபதி: இன்று (நேற்று) கூடிய முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலே யே 10ஆயிரம் பேருக்கு (வேலையற்ற பட்டதாரிகளுக்கு) வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகரித்தது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர்: எங்களுக்கு 45 வயதுக்கு மேல் ஆகிறது சேர்.

ஜனாதிபதி: 45 வயதுக்கு மேற்பட்டவர்கள், இதுவரையிலும் என்ன செய்தீர்கள்?

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர்: எட்டு வருடங்கள் நாங்கள் வீட்டில் இருந்தோம்; கடந்த ஆட்சியிலேயே எங்களுடைய வயது சென்றுவிட்டது. எங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவில்லை சேர்.

ஜனாதிபதி: சரி, சரி நாங்களும் வேலை செய்திருக்கின்றோம். (ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவரைப் பார்த்து) உங்களுக்கு 45 வயதாக இருக்கமுடியாது?

அந்த ஆர்ப்பாட்டக்காரர்: எனக்கு 38 வயதாகிறது சேர்.

ஜனாதிபதி: அப்படியாயின் என்ன பிரச்சினை

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர்: எங்களுடைய பெயர் வெட்டப்பட்டுள்ளது சேர். ஜனாதிபதி: அச்சப்படாதீர்கள்! எல் லோருக்கும் வேலைவாய்ப்புத் தருவேன். மேலும், 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்தது. ஆகையால், வெயிலிலே காயாமல்

எல்லோரும் வீட்டுகளுக்குச் செல்லுங்கள்.

ஜனாதிபதி இவ்வாறு கூறிவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களும் சில நிமிடங்களில், தங்களுடைய ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுவிட்டு, அங்கிருந்து கலைந்துசென்றுவிட்டனர்.

# சபாநாயகர் யாப்பா: பிரதி சபாநாயகர் ரஞ்சித்

ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரிமாளிகையில் நேற்று (19) மாலை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# 'ஜனாதிபதியின் பதவிக் காலத்தில்...

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின்போது, எடுக்கப்பட்ட தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில், நேற்று (19) இரவு நடைபெற்றது. அதில், கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, தொடர்ந்து கருத்துரைத்த அவர், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ள நல்ல விடயங்கள், நாட்டுக்குப் பாதகமான விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது, அந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, நல்ல விடயங்களை மாத்திரம் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ளடக்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்றார்.

மேலும், ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை. தற்போது உள்ளவாறே அது நீடிக்கும். ஜனாதிபதி ஒருவர், இரு தடவைகள் மாத்திரமே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமென்கிற சட்டத்திலும் மாற்றம் இல்லை என்றார்.

புதிய அரசமைப்பில், புதிய பதவிகள் உருவாக்கப்படுமா என்கிற கேள்விக்குப் பதிலளித்த கம்மன்பில, அவ்வாறான எந்தவொரு தீர்மானங்களையும் அமைச்சரவை மேற்கொள்வில்லை எனவும் தெரிவித்தார்.

மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகளில் அரசாங்கத்தின் தலையீடுகள் இருக்காதெனவும், அந்த விசாரணைகளுக்குத் தேவையான உதவிகளை அரசாங்கம் வழங்கும் என்றார்.

# இ.போ.ச முகாமையாளருக்கு விளக்கமறியல்

சீர்செய்யும் நோக்கிலேயே, 60 ஆயிரம் ரூபாயை பிராந்திய முகாமையாளர் இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுவின் அதிகாரிகள், மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். ஆணைக்குழுவின் சார்பில் ஆஜராகியிருந்த அதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதவான் எம்.கணேசராஜா, சந்தேகநபரை ஓகஸ்ட் 27ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், சிறைச்சாலை அதிகாரிகளின் ஊடாக, அன்றையதினம் (ஓகஸ்ட் 27) கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார்.



# வெலிக்கடையில் இரவைக் கழித்தார்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிட்டு, 54,198 விருப்பு வாக்குகளைப் பெற்று அவர், நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில், சந்தேகத்தின் பேரில் 2015ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட, அவர், தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து அழைத்துவரப்பட்ட அவர், வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில், நேற்று முழுவதும் தங்கவைக்கப்பட்டு, நாடாளுமன்றத்தின் முதல் அமர்வுக்காக, இன்று (20) காலை, அழைத்துச் செல்லப்படுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மனித படுகொலை குற்றச்சாட்டில், இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் குற்றவாளியாக இனங்காணப்பட்ட, 'சொக்கா மல்லி' என்றழைக்கப்படும் பிரேமலால் ஜயசேகரவும், நாடாளுமன்றத்துக்கு அழைத்துவரப்படவுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிட்டிருந்த நிலையில், தேர்தல் பிரசாரக் காலத்திலேயே அவருக்கு, மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும், அத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அவர் மேன்முறையீடு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை இணை பேச்சாளர்கள் நியமனம்



புதிய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளராக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வல நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், அமைச்சரவை இணைப் பேச்சாளர்களாக அமைச்சர்களான உதய கம்மன்பில, ரமேஷ் பத்தரண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று (19) நடைபெற்றது. இதன்போதே, மேற்கண்ட நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# ரணவக்கவுக்கு முன் பிணை

நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட முன் பிணையின் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை விடுதலை செய்ய, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க நேற்று (19) உத்தரவிட்டுள்ளார்.

இராஜகிரிய பகுதியில் 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி சந்தீப் சம்பத் குணவர்தன என்பவரை விபத்துக்கு உள்ளாக்கியமை தொடர்பில் சட்டமா அதிபரால்



கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று (19) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, மேற்கண்டவாறு நீதிபதி உத்தரவைப் பிறப்பித்தார்.

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவரையும் இன்றைய தினம் (20) நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, ஏற்கெனவே, அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், சம்பிக்க ரணவக்க சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் முன்னகர்த்தல் மனுவை, நேற்று (19) தாக்கல் செய்து, நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டம், நாளை (இன்று) நடைபெறவிருப்பதால், நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்காக, பிறிதொரு திகதியைக் குறித்தொதுக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்நிலையிலேயே ஓகஸ்ட் 28ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# 1/4 போத்தல் சாராயம், ஒற்றை சிகரெட் விற்பனை நிறுத்தம்?



180 மில்லி லீற்றர் சாராய விற்பனை (1/4 போத்தல்) மற்றும் தனியொரு சிகரெட்டை விற்பனைச் செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை நிறுத்துவதற்காக, புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த உள்ளதாக, புகையிலை, மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல வோடர்ஸ் ஏஜ் ஹோட்டலில், நேற்று முன்தினம் (18) நடைபெற்ற செயலமர்வொன்றில் கலந்துகொண்டு விரிவுரை ஆற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், கால் போத்தல் சாராய விற்பனையால் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு உள்ளதெனத் தெரிவித்தார். அத்தோடு, தனி சிகரெட் விற்பனையைத் தடை செய்வதற்கான சட்டமூலத்தை, 2019ஆம் ஆண்டில் இரு தடவைகள் அமைச்சரவையில் சமர்பித்திருந்த போதும், அதற்கு அனுமதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்த அவர், அடுத்த வாரம் மீண்டும் அந்த சட்டமூலத்தை அமைச்சரவையில் சமர்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் வெற்றிலைக் கூறுகளை விற்பனை செய்வது, முழுமையாக தடைச் செய்யப்பட்டுள்ள போதும், அதனைக் கருத்திற்கொள்ளாத நிலையே காணப்படுவதாகத் தெரிவித்த அவர், எதிர்வரும் நாள்களில், அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் சிகரெட், மதுபான வகைகளை விற்பனை செய்வதால் பெறப்படும் வரி வருமானத்தை, அவற்றின் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கே செலவிட நேரிட்டுள்ளதெனவும் அது தொடர்பாக அவதானம் செலுத்திய பின்னரே, சிகரெட், மதுபான உற்பத்தி தொடர்பானச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## ‘சர்வதேச தரத்துக்கு அமைய இலங்கையில் புதிய பாடத்திட்டம்’

சர்வதேச தரத்துக்கு அமைய, இலங்கையில் புதிய பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தத் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ள கல்வி அமைச்சு, முதலாம் தரத்தில் இருந்து 13ஆம் தரம் வரை, பாடத்திட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டுள்ளது.

“கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸின் ஆலோசனைக்கு அமைய, இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது” என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார முறைமை, தொழில் சந்தை ஆகியவற்றை உள்ளடக்கியதாக புதிய பாடத்திட்டம் தயாரிக்கப்படுமெனத் தெரிவித்த, கல்வி அமைச்சின் செயலாளர், இது தொடர்பிலான கருத்துகள், யோசனைகளை மாவட்ட ரீதியாகக் கல்வித்துறைசார் வல்லுநர்கள், மாணவர்கள், வர்த்தகப் பிரிவினர் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடம் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

புதிய பாடத்திட்டத்தை, அடுத்த வருடம் முதல் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கபில பெரேரா, தற்போதைய கல்வி முறையூடாக மாணவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தை, புதிய பாடத்திட்டத்தின் மூலம் குறைக்க முடியுமென நம்பப்படுகின்றது என்றார்.

## சகல பாடசாலைகளையும் மீள ஆரம்பிக்கத் தீர்மானம்

கொரோனா வைரஸ் வியாபித்தமையால் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் சகல பாடசாலைகளையும் மீளவும் ஆரம்பித்து, கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில், அவதானம் செலுத்தப்பட்டுள்ளதென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

வகுப்பறைகளில் வசதிகள் இருந்தால், சமூக விலகல் விதிமுறைகளை அமல்படுத்த முடிந்தால், பாடசாலைகளை முழுமையாகத் திறக்க முடியுமென அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளில் முழு மாணவர்களின் எண்ணிக்கை 200க்கும் மேற்பட்டதாக இருந்தாலும் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி, மாணவர்களுக்கு இடையே சமூக இடைவெளியைப் பேணமுடியுமாயின் பாடசாலைகளைத் திறக்கமுடியுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

## அதிரடிப்படைக்கு அழைப்பு

இலங்கை மின்சார சபையின் கட்டுப்பாட்டு அலகைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு, அமைச்சர் டலஸ் அலஹப்பெரும பணித்துள்ளார்.

அண்மையில், முழு நாட்டிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருந்த நிலையில், மின்சார சபையின் கட்டுப்பாட்டு அலகை மேற்பார்வை செய்த அமைச்சர், மேற்கண்ட பணிப்புரையை விடுத்துள்ளார். முழு நாட்டுக்குமான மின் விநியோகச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அலகை, தொடர்ச்சியாக பாதுகாப்பதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், அதனைப் பாதுகாக்கும் அதிகாரிகளுடன், விஷேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பையும் பெற்றுக்கொள்வது தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்வுக்கு அறிவித்துள்ளார்.

### கொள்கைப் பிரகடன உரையின் மீது

# விவாதத்தை கோர முடிவு

## அங்கஜனுக்குப் பதவி; 11 கட்சித் தலைவர்கள் கூடுவர்

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாடாளுமன்றத்திலிருந்து இன்றுமாலை 3 மணிக்கு நிகழ்த்துவார்.

அந்த உரையின் மீது, ஒருநாள் விவாதத்தைக் கோருவதற்கு, ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் ஆகிய இருவரின் தெரிவுக்கு ஒத்துழைப்பு நல்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், குழுக்களின் பிரதித் தலைவராக எதிரணியின் சார்பில் ஒருவரை நியமிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோருவதற்கு, அக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது.

எனினும், சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தனவையும் பிரதிச் சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவையும் நியமிப்பதற்குத் தீர்மானித்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, குழுக்களின் பிரதித் தலைவராக, யாழ். மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய, அங்கஜன் இராமநாதனை நியமிப்பதற்கு ஆலோசித்துள்ளதாக அறியமுடிகின்றது.

> **“ சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தனவையும் பிரதிச் சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவையும் குழுக்களின் பிரதித் தலைவராக, அங்கஜன் இராமநாதனையும் நியமிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது**

இதேவேளை, நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நிறைவடைந்ததன் பின்னர், சபாநாயகர் தலைமையில், கட்சித் தலைவர்களுடன் விசேட கூட்டமொன்று நடத்தப்படும். இதன்போது, நாடாளுமன்றத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும்.

அக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் தேசிய முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய 11 கட்சிகளின் தலைவர்கள் கூடி ஆராய்வர்.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சி, எங்கள் சக்தி மக்கள் கட்சி ஆகியவற்றுக்குத் தேசியபட்டியல் நியமனங்கள் இரண்டு கிடைத்துள்ளன. அவை பூர்த்தி செய்யப்படாமையால், அவ்விரு கட்சிகளின் பிரதிநிதிகள் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்க மாட்டார்கள்.




ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், இன்று (20) மாலை 3 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்படும். ஜனாதிபதியை வரவேற்பதற்காக, கொழும்பு தேவி பாலிகா வித்தியாலய மாணவியரால் ஜயமங்கள கீதம் இசைக்கப்படும். அதற்கான ஒத்திகை நேற்று (19) நடைபெற்றது.

## ஐயாயிரம் புலைமை பரிசில்கள் வழங்கல்

பா. நிரோஸ்

கனேடிய பொதுநலவாய கற்கைகள் சங்கத்தின் புலைமைப் பரிசில்களை, 5,000 இலங்கையர்களுக்கு வழங்கவுள்ளதாக, அந்தச் சங்கத்தின் தலைவர் செனாலா குணவர்தன தெரிவித்தார்.

தேசிய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று (19) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு மேலும் கருத்தரைத்த அவர், கொவிட் - 19 பரவல் காரணமாக, உலகலாவிய ரீதியில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் 1.6 பில்லியனுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், உலக நாடுகளில் பொருளாதார நிலைமைகளும் பாதிப்படைந்து உள்ளதெனவும் அதனால், இணையம் மூலமான கல்வி முறைகள் வேகமாக வளர்ந்து வருகின்றதெனவும் தெரிவித்தார். அதன்படி, தேசிய நூலகம், ஆவணமாக்கல் திணைக்களத்தின் கீழ், கனேடியப் பொதுநலவாய கற்கைகள் சங்கத்தின் உதவியுடன், 3,800 கற்கை நெறிகளை பணம் செலுத்தாமல் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

### சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள்

# ‘வீடுகளுக்குள்ளேயே இடம்பெறுகின்றன’

சிறுவர்களின் பாதுகாப்பு விடயத்தில், பெற்றோர்கள் பொறுப்புத் துறந்துச் செயற்படும் நிலைமை அதிகரித்துள்ளதெனத் தெரிவித்த சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரோயகத் தடுப்புச் செயலணியின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பிம்ஷானி ஜாசிங்கஆரச்சி, வீட்டுக்குள்ளேயே சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்றனர் எனவும் தெரிவித்தார்.

ஆழ்க்கடலில் வைத்து, 48 நாள்களாகச் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட மாத்தறை - மிரிஸ்ஸ பகுதியைச் சேர்ந்த சிறுவனை, நேற்று நேரில் சென்று பார்வையிட்டதாகவும் அந்தச் சிறுவனது குடும்பத்தின் வறுமை காரணமாகத்தான், அவன் கடற்றொழிலுக்குச் சென்றுள்ளான் என்றும், அவர் தெரிவித்தார்.

குறித்த சிறுவன் செய்த சிறு தவறு காரணமாகத்தான், கடுமையான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டுள்ளான் என்றும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடை ஐவரை, பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் நேற்று (19) ஆஜர்படுத்திய போது, ஐவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதிவரையில் விளக்கமறியிடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் கூறினார்.

இது போன்ற சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் குறித்து முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளில், 13- 16 வயது வரையான பெண் பிள்ளைகள், அதிகளவில் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளன எனவும் ஆண் பிள்ளைகள் மீதான துஷ்பிரயோகச் செயற்பாடுகளும் அதிகரிப்பை காட்டுகின்றர் எனவும் கூறிய அவர், த்தொழில்நுட்பத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகச் செயற்பாடுகளும் அதிகளவில் பதிவாகி வருவதாகவும் கூறினார்.



சொந்த வீடுகளுக்குள்ளேயே அதிகளவில் சிறுவர்கள் பாதிக்கப்படுவதோடு, தாய், தந்தை இருவரும் இருக்கும் பிள்ளைகளே, இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு ஆளாவது கவலைக்குரியதெனவும் தெரிவித்தார்.

### மின்சாரப் பிரச்சினை;

## ‘வார இறுதியில் தீர்வு கிடைக்கும்’

இந்த வார இறுதியில், மின்சாரப் பிரச்சினைக்கான தீர்வை வழங்கவுள்ளதாக, இலங்கை மின்சார சபையில் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்தார். நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டதாலேயே, இந்தப் பிரச்சினை எழுந்துள்ளதென்றும் அவர் கூறினார்.

இந்நிலையைச் சீர்செய்வதற்காக, செவ்வாய்க்கிழமை (18) முதல், தொடர்ந்து 4 நாள்களுக்கு, ஒரு மணித்தியால மின் வெட்டை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், எவ்வாறாயினும், மின் வழங்கல் போதுமாக இருந்தமையால், சில பகுதிகளில் நேற்று முன்தினம் (18) மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லையெனவும் கூறினார். குறுகிய காலத்துக்குள் அனல் மின் நிலையத்தின் செயற்பாட்டை வழமைக்குக் கொண்டு வருவது கடினமெனவும் நாளை (21) அல்லது சனிக்கிழமையன்று, நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் செயற்பாட்டை வழமைக்குக் கொண்டுவர முடியுமென்றும், விஜித்த ஹேரத் தெரிவித்தார்.


**வாடகைக்கு**

வாடகைக்கு
இரத்மலான ஸ்ரீ தர்மராம வீதி வளவாவத்தவில்,
அறையொன்று வாடகைக்கு உண்டு 0763750995

**பொது அறிவிப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு இன் படி பின்வரும் நிறுவனம் 2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி அன்று கூட்டிணைக்கப்பட்டது என்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பெயர் : சீ சீ சீ ரெசிடென்சஸ் மெனேஜ்மென்ட் கோர்பரேஷன் (பீவீட) எல்டீடி

நிறுவனத்தின் இல : பி – வீ 00225930

பதிவு செய்யப்பட்ட முகவரி :
இல. 137, சேர் ஜேம்ஸ் பீரீஸ் மாவத்தை, கொழும்பு – 2

ஜேசீ என்ட் கம்பனி
கம்பனி செயலாளர்கள்
இல. 9/5, தம்பியா எவன்யு, கொழும்பு – 07.

**அடோர்னி தத்துவ இரத்துச் செய்தல்**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசில் அங்கொட, கொட்டிகாவத்த, இல. 397/09 எனும் இடத்தில் குடியிருக்கும் மற்றும் தேசிய அடையாள அட்டை இல. 552422481V கொண்ட குருப்பு ஆராச்சிகே ரூபசிங்க ஆனந்த லால் ஆகிய நான் 2018 நவம்பர் மாதம் நான்காம் திகதி கொழும்பில் பிரசித்த நொத்தாரிசு திருமதி. மஞ்சுளா நிஷாந்தி ரூபசிங்க அவர்களாள் எழுதி உறுதி செய்யப்பட்டதும் பதிவாளர் நாயக திணைக்களத்தின் பத்தரமுல்லை வட்டார அலுவலகத்தில் எழுத்து மூலமாக மற்றும் அற்றோனித் தத்துவ ஆவணத்தில் 256 ஆம் அத்தியாயத்தில் 14 ஆம் பதிவேட்டில் 20113 ஆம் தினக்குறிப்பேட்டின் கீழ் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி எழுதி பதிவுசெய்யப்பட்டதுமான அடோர்னி தத்துவ பத்திர இல. 1754 என்ற அடோர்னி தத்துவ பத்திரம் மூலம் அங்கொட, கொட்டிகாவத்த, இல. 397/09 என்ற இடத்தில் குடியிருக்கும் மற்றும் தேசிய அடையாள அட்டை இல. 926720384V கொண்ட கத்யா பவித்ரிகா குருப்பு என்பவருக்கு வழங்கப்பட்ட அடோர்னி தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக ரத்துச்செய்கிறேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சட்டங்களுக்குள் முடங்கி கைத்தொழில்கள் வீழ்ச்சியடைவதற்கு

# ‘இடமளிக்க முடியாது’

சட்டதிட்டங்களுக்குள் முடங்கி, பாரம்பரியக் கைத்தொழில்கள் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்க முடியாதென, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாரம்பரியக் கைத்தொழில்கள் குறித்த கரிசனையற்ற சட்டங்களை ஆக்குவதன் மூலம், கைத்தொழிற்றுறையும் சுதேச கைத்தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையும் வீழ்ச்சிடைந்திருப்பதாகவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பிரம்பு, பித்தளை, மட்பாண்டம், மரப்பாண்டம், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டம் தொடர்பாக, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தவறு செய்யும் சிறு பிரிவினர் காரணமாக, சட்ட ரீதியாகக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிப்படைவதற்கு இடமளிக்கக் கூடாதென்றார்.



சுதேச கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு, அதிகாரிகள் ஆக்கத்திறன் வாய்ந்த வகையில் செயற்படுவது அவசியம் எனத் தெரிவித்த அவர், அடிமட்டத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்து முக்கிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் கூறினார்.

அரசாங்கம் மேற்கொள்ளும் தீர்மானங்கள், கீழ் மட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பது பற்றி ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகுமெனத் தெரிவித்த ஜனாதிபதி, நீண்டகாலமாக உரிய கவனம் செலுத்தப்படாதிருக்கும் பாரம்பரிய கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வது திட்டமிட்ட வகையில் செய்யப்பட வேண்டுமென்றும் கூறினார்.

அத்துடன், விவசாயப் பெறுமதியற்ற தரிசு நிலங்களை, பிரம்பு போன்ற கைத்தொழில் துறைக்குத் தேவையானவற்றைப் பயிரிடுவதற்காகப் பயன்படுத்த முடியும். ஊதுபத்தி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூங்கில் குச்சிகளை இறக்குமதி செய்வதற்கு, வருடாந்தம் அதிக பணம் செலவிடப்படுகின்றது. அவற்றை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதன் மூலம், வெளிநாடுகளுக்குச் செல்லும் நிதியை மீதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

அரச கள உத்தியோகத்தர்களுக்கு

## மோட்டார் சைக்கிளை வழங்குமாறு கோரிக்கை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்ட அரச கள உத்தியோகத்தர்களுக்கு, சலுகை அடிப்படையில் வழங்கப்படாத மோட்டார் சைக்கிளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் செயலாளர் எஸ். ஆப்தீன் தெரிவித்தார்.



இது தொடர்பாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, நேற்று (19) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில், குறிப்பிடப்பட்டு உள்ளதாவது, “2014ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, மஹிந்த சிந்தனைத் திட்டத்தில், நாடளாவிய ரீதியில் அமல்படுத்தப்பட்ட கள உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்குவதாக முன்வைத்த யோசனைக்கமைய, சலுகை அடிப்படையிலான மோட்டார் சைக்கிளை வழங்குவதற்கு ஆவணம் செய்ய வேண்டும்” எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்கல் திட்டத்தின் போது, அம்பாறை மாவட்டத்திலுள்ள 5,650 கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும், அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

எனவே, அம்பாறை மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத வலையில் மீன்பிடி;

## மூன்று இயந்திர படகுகள் மீட்பு

■ வா.கிருஸ்ணா



சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடத் தயார் நிலையிருந்த மூன்று இயந்திரப் படகுகளும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகளும், நேற்று (19) காலை மீட்கப்பட்டுள்ளன என்று, மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் ருக்ஷான் குரூஸ் தெரிவித்தார்.

மேற்படி திணைக்களத்தின் எல்லைக்குட்பட்ட நொச்சிமுனை பகுதியில், விசேட அதிரடிப்படையினர், கடற்படையினர், இராணுவத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, இவை மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுவளைப்பின் போது சுமார் 35 இலட்சம் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத வலைகள் மீட்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது, நாட்டில் தடைப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதாக மீனவர்கள் வழங்கும் முறைப்பாடுகளின் அடிப்படையில், இவ்வாறான மீன்பிடிகளைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள முன்னெடுத்து வருகின்றது.



## உலர்ந்த மஞ்சளுடன் நால்வர் கைதாகினர்

மன்னார் - வங்காலை, நுரைச்சோலை - தலுவ ஆகிய கடற்கரைகளின் ஊடாக, சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகை உலர்ந்த மஞ்சளுடன், கடற்படையினரால் நான்கு பேர், நேற்று முன்தினம் (18) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து, 807 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் பொதிகள் 14, இரண்டு டிங்கி ரக படகுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளனவென, கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள், 25 வயதுக்கும் 58 வயதுக்கும் இடைப்பட்டவர்களெனவும் இவர்கள், கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்களெனவும், விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மன்னார் - வங்காலை, நுரைச்சோலை - தலுவ ஆகிய கடற்கரைகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கைகளின் போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை, சின்னபாடு, யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று, கடற்படையினர் தெரிவித்தனர்.

கடந்த 3 வாரங்களில், கடற்படையினரால் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 8,245 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரு வீடுகள் தீக்கிரை

### மேலுமொரு வீடு விஷமிகளால் சேதம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பிரதேசத்தில், நேற்று முன்தினம் (18) இரவு 11 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, இரு வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. நாவற்குடா இசை நடனக் கல்லூரி வீதியின் 11ஆம் குறுக்கிலுள்ள இவ்வீடுகளே முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன. இந்த இரு வீடுகளில் பரவிய தீயை, மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான தீயணைப்புப் படையினர் கட்டுப்பாட்டுள்குள் கொண்டுவந்தனர். இதேவேளை, மேற்படி பிரதேசத்தில் அமைந்துள்ள மற்றொரு வீடு, இனந்தெரியாத நபர்களால் பாரியளவில் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும், காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயில் நிலையக் களஞ்சியத்தில் திருட்டு

■ எம்.றொசாந்த்

கோண்டாவில் ரயில் நிலையக் களஞ்சியத்தில் இருந்து, ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளனவென, கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம், நேற்று முன்தினம் (18) இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம், ரயில் திணைக்களப் பணியாளர்கள், களஞ்சியசாலையை பார்வையிட்ட போதே, அது உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டமையை அறிந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பேராதனைப் பல்கலைக்கழக

## நூலகராக மகேஸ்வரன் நியமிக்கப்பட்டார்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 8ஆவது கல்விசார் நூலகராக, இராசையா மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.



இராசையா மகேஸ்வரன், 1984ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைகழகத்தின் மாணவராகச் சேர்ந்து, புவியியற்றுறையில் சிறப்புக் கற்கை நெறியில் பட்டதாரியானார். 1994ஆம் ஆண்டு கல்விசார் உதவி நூலகராக, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்தார். 2001ஆம் ஆண்டு கொழும்பு பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் நூலகத் தகவல் தொழில்நுட்ப முதுமானி பட்டத்தைப் பெற்று, கல்விசார் சிரேஷ்ட நூலகராகப் பதவி உயர்ந்தார்.

2007ஆம் ஆண்டு கல்விசார் முதுநிலை நூலகராகப் பதவிபெற்று, 2011ஆம் ஆண்டு இணைப் பேராசிரியருக்கு சமனான பிரதி நூலகராகப் பதவி உயர்வு பெற்றார். 2015 தொடக்கம் பதில் நூலகராக நூலகத்தைப் பொறுப்பேற்று, கடந்த ஐந்து வருடங்களாகக் கடமையாற்றி வந்தார்.

இவரது காலத்தில், 1960க்கு பின் சுமார் 57 வருடத்துக்குப் பின், புதிய கட்டடம் இணைய நூலகம், டிஜிட்டல் நூலகம் அரும்பொருட் காட்சியகம், ஓவியம், சிற்பம் மற்றும் ஓலைச்சுவடிகளுக்கான காட்சியறைகள் கொண்ட பல்வேறு சேவைகளுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகக் கட்டப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக நூலகம், யுனிவசிட்டி கல்லூரி 1921ஆம் ஆண்டு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட போது உருவாக்கப்பட்ட நூலகத்தின் நூல் சேர்க்கையைக் கொண்டுள்ளது. 2021ஆம் ஆண்டு, இந்நூலகத்துக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படவுள்ளது.

சதாசகாய மாதா திருவிழாவுக்கு

## நூறு பேருக்கே அனுமதி

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன், எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு - ஆயித்தியமலை, சதாசகாய மாதா திருவிழாவுக்கு, ஒரே நேரத்தில் நூறு பக்தர்களை மாத்திரமே தேவாலயத்துக்குள் அனுமதிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

விசேடமாக, மூன்று திருப்பலிகள் நடத்துவதற்கு, குரு முதல்வர்கள் தீர்மானித்துள்ள அதேவேளை, அன்னதானம், தண்ணீர்ப் பந்தல்கள், கடைகள், உணவகங்களுக்கான அனுமதிகள் மறுக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள திருவிழாவை முன்னிட்டு, மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜா தலைமையில், மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில், நேற்று முன்தினம் (18) கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

மாவட்டச் செயலக கிறிஸ்தவ மத அபிவிருத்தி உத்தியோகத்தர் ரேகா நிரூபனின் ஒருங்கிணைப்பில், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் சங்கைக்குரிய கலாநிதி பொன்னையா ஜோசப், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில், கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான சுற்றுநிருபத்தின் அடிப்படை விடயங்களைப் பின்பற்றுமாறு, சுகாதாரத் திணைக்களத்தினர் வலியுறுத்தினர்.

அத்தோடு, பாதுகாப்புக்காக பொலிஸாரும் இராணுத்தினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்கும்போது, போத்தலில் அடைக்கப்பட்ட நீர் வழங்குவதாகவும், இக்கூட்டத்தில் தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

## துப்பாக்கி ரவைகள் மீட்பு

■ செந்தூரன் பிரதீபன்

மயிலிட்டி பகுதியில் உள்ள தனியார்க் காணி ஒன்றில் இருந்து, நேற்று (19), ஒரு தொகுதி துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளனவென, இராணுவத்தினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (18) மாலை, காணி உரிமையாளர் கனரக வாகனத்தின் உதவியுடன் காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்த போது, மண்ணுக்குள் புதையுண்ட நிலையில், டி-56 ரக துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குண்டு செயழிக்கும் பிரிவினருடன், நேற்று (19) அப்பகுதிக்கு விரைந்த இராணுவத்தினரும் பொலிஸாரும், இந்தத் துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர்.



கூலி வேலையில் ஈடுபட்டிருந்த

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (18) கூலி வேலையில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர், திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

புத்தூர் - கலைமதி கிராமத்தைச் சேர்ந்த உ.சதிஸ் (வயது 43) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே, இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சுன்னாகம் பகுதியில், கூலி வேலையில் ஈடுபட்டிருந்த இந்நபர், திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

இதையடுத்து அங்கிருந்தவர்கள் அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது, அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டாரென, வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வருட இறுதிக்குள்

## நாட்டில் சேலைன் போத்தல் தொழிற்சாலை

நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 90 சதவீதமானவை, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகத் தெரிவித்த பொதுஜன பெரமுனவின் அநுராதபுர மாவட்ட தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஷன்ன ஜயசுமன, இந்த வருடம் நிறைவடைவதற்குள், நாட்டுக்குத் தேவையான சேலைன் போத்தல்களை, இந்நாட்டிலேயே தயாரிப்பதற்கான தொழிற்சாலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.



இது தொடர்பில் கருத்துரைத்த அவர், “பல மில்லியன் ரூபாய் செலவில், வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு சேலைன் போத்தல்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஒரு சேலைன் போத்தல்கூட இங்கு தயாரிக்கப்படுவது இல்லை. அதற்கான வசதிகள், இந்நாட்டில் இல்லை” என்றார்.

இது தொடர்பில், நேற்று முன்தினம் (18) பசில் ராஜபக்ஷவுடன் நடைபெற்ற முதலாவது கலந்துரையாடலில், தாம் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகத் தெரிவித்த அவர்,

“இந்த வருடம் நிறைவடைவதற்குள், எமது உற்பத்தியை நாட்டுக்கு வழங்குவோம்” என்றார்.

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன், 5 வருடத் திட்டத்தில், வெளிநாடுகளிலிருந்து மருந்து இறக்குமதியை முழுமையாக நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார் எனவும் தற்போது அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

**“ கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன், 5 வருடத் திட்டத்தில், வெளிநாடுகளிலிருந்து மருந்து இறக்குமதியை முழுமையாக நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். தற்போது அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன**

# கிராமிய தொழிற்றுறைகளுக்கு முன்னுரிமை

## பிரம்பு, பித்தளை, களிமண், தளவாடங்கள் மற்றும் கிராமிய தொழிற்றுறை மேம்பாடுகள் அமைச்சு நடவடிக்கை

ச. சேகர்

புதிதாகப் பதிவியேற்றுள்ள இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சில அமைச்சுகள், வெளியிலிருந்து பார்க்கும் போது நகைப்பூட்டுவதாகவும், ஏளனம் செய்வதாகவும் அமைந்துள்ளது. குறிப்பாக சமூக வலைத்தளங்களில் சில அமைச்சர்களை நையாண்டி, ஏளனம் செய்யும் வகையில் சில கருத்துகள் பகிரப்பட்டிருந்ததை கடந்த வாரம் முழுவதிலும் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு அதிகளவு பேசப்பட்ட அமைச்சாக பிரம்பு, பித்தளை, களி மண்சார் உற்பத்திகள், தளவாடங்கள் மற்றும் கிராமிய தொழிற்றுறைகளுக்கான அமைச்சையும் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பிரசன்ன ரணவீரவையும் குறிப்பிட முடியும். கம்பஹா மாவட்டம் சார்பாக போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்த இவருக்கு இந்த பதவி வழங்கப்பட்டுள்ளமைக்காக பலரும் பலவிதமான கருத்துகளை முன்வைத்திருந்தனர்.

மாறாக இவருக்கு வழங்கப்பட்டுள்ள துறையின் முக்கியத்துவம் பற்றி நன்கு அறிந்த ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான மயூர சமரகோன் குறிப்பிடுகையில்,

களி மண் தயாரிப்பு அமைச்சின் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படுமாயின், முழு நாடும் முன்னேற்றம் காணும். வீட்டுக் கூரைகளுக்கு அஸ்பெஸ்டஸ் தகடுகளைப் பயன்படுத்துவதைக்கூட அபிவிருத்தியடைந்த நாடுகளில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டு களி மண்ணைக் கொண்டு தயாரிக்கப்படும் உள்நாட்டுக் கூரை, ஓடுகள் தொழிற்றுறை மிகவும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. அஸ்பெஸ்டஸ் கூரைகளை இட்டதும், வீடுகளில் இருக்க முடியாது அதிகளவு வெப்பமாக உள்ளது எனக் குறைகூறி, பின்னர் வெளிநாடுகளிலிருந்து மின்விசிறிகள் மற்றும் வாயு குளிரூட்டிகளை இறக்குமதி செய்கிறோம். காஸ் அடுப்புகளுக்கு பொருத்தமான பானைகள் போதியளவு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாமையால், அலுமினியத்தினாலான பாத்திரங்களை சீனாவிலிருந்து இறக்குமதி செய்து, அவற்றில் உணவு சமைத்து, அலுமினியம் கலந்த உணவை அருந்துகின்றோம். சீனாவிலிருந்து வரும் டைல்கள் பதிக்கப்பட்ட நிலத்தில் காணப்படும் கடினத்தன்மை, களி மண் மாபிள்களில் காணப்படுவதில்லை. களி மண் மாபிள்களில் காணப்படும் குளிர்மை தன்மை பாதங்களுக்கு இதமானதாக அமைந்துள்ளன. ஆனாலும், விலையில் உயர்ந்ததால், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மாபிள்கள் பயன்படுத்துகின்றோம். செங்கற்களின்



விலை உயர்வாக காணப்படுவதால், சீமெந்து கற்களாலான வீட்டை நிர்மாணிக்கின்றோம். அதன் பின்னர் செங்கற்களால் நிர்மாணிக்கப்பட்ட ஹோட்டல் அறைகளுக்குச் சென்று, ”இவை மிகவும் இதமாக உள்ளன” என ஆதங்கம் செய்கிறோம். ஹோட்டல் அறைக்கான வாடகையையும் செலுத்துகின்றோம். வீட்டில் படுக்கை அறையை களிமண் கொண்டு பூசிக் கொள்வது உகந்ததாக வாஸ்து முறைப்படி கூறப்பட்டுள்ளது. லக்சல விற்பனை நிலையங்களில் காணப்படும் மட்பாண்டங்களின் விலை மிக உயர்வாகும். அவை வேறு மட்டத்தில் முன்னெடுக்கப்படும் வியாபாரமாகும். கிராமிய மட்டத்தில் இவ்வாறான தொழில்களில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து கைகொடுத்தால், வேலைவாய்ப்புகளின்றி காணப்படும் பலருக்கு வருமானமீட்டும் வாய்ப்புக் கிடைக்கும். இதற்கு விசேடமாக கற்றலில் ஈடுபட வேண்டியதில்லை. சுருக்கமாக குறிப்பிடுவதானால், களி மண் உற்பத்திகளை சரியான முறையில் மேற்கொண்டால், இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியை அதிகரித்துக் கொள்ள முடியும். *Made In Srilanka* எனும் நாமம் பொறிக்கப்பட்ட மண் கோப்பைகளில் வெளிநாட்டவர்கள் நெஸ்கஃபே அருந்துவார்கள். களி மண் சட்டிகளில் பொதி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் மாத்தறை மீன் புளிக்குழம்பு, கொஹில அல்லது பலா விதைகளுக்கு வெளிநாட்டவர்களின் சுப்பர்மார்க்கெட்களில் அதிகளவு கேள்வி காணப்படுகின்றது. இந்த களி மண் அமைச்சின் பொறுப்புகள் முறையாக முன்னெடுக்கப்பட்டால், அது மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக அமையும். சுருக்கமாக குறிப்பிட்டால், இந்த அமைச்சுக்கு நியமிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கு, ஜனாதிபதி வழங்கியுள்ள பொறுப்பு, “இயலுமாயின் இந்த விடயத்தைப் புரிந்து கொண்டு நிறைவேற்றிக் காண்பிக்கவும்” எனும் ஒரு சவாலாகும். இனி இந்த பொறுப்பை ஏற்று, முறையாக அதனை நிறைவேற்றிக் காண்பிப்பதாகும். என்றார்.

இந்த அமைச்சினால் இலங்கையின் பாரம்பரிய தொழிற்றுறைகள் அதாவது இலங்கைக்கு அடையாளத்தை வழங்கக்கூடிய தொழிற்றுறைகள் உள்ளடங்கியுள்ளன. டிஜிட்டல் மயமாக்கம், நவீன மயமாக்கம் போன்ற காரணிகளால் சௌகரியத்தை நோக்கி நகர்ந்துள்ள நிலையில்,



இலாபகரமான, சௌகரியமாக மற்றும் துரிதமாக தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் இலாபகரமான தீர்வுகளுக்கு பெருமளவானோர் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர்.

கொவிட்-19 தொற்றுப் பரவலினூடாக எமக்கு உணர்த்தப்பட்ட முக்கிய படிப்பினையாக, இயற்கையுடன் ஒன்றித்து, இயற்கையுடன் பழக்கப்படுத்தி வாழப்பழக வேண்டும் என்பது அமைந்துள்ளது. இந்நிலையில், இந்தத் துறைக்கு வலுச்சேர்த்து மீளக் கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பாக இது அமைந்துள்ளது. அதனூடாக இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் தெரிவுகளை விஸ்தரித்துக் கொள்ள முடியும் என்பதுடன், அந்நியச் செலாவணியை ஈட்டுக் கொள்வதற்கும் வாய்ப்பாக அமைந்திருக்கும்.

ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகோலும் இந்த பிரம்பு, பித்தளை, களி மண் சார் உற்பத்திகள் போன்ற கிராமிய தொழிற்றுறைகளின் முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளமையானது நல்லதோர் ஆரம்பமாக அமைந்துள்ளது.

வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் இந்தத் துறைகளில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களை இனங்கண்டு, அவர்களை ஊக்குவிப்பதற்கு அமைச்சினால் எவ்விதமான திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.





## பங்குச் சந்தை

COLOMBO STOCK EXCHANGE

2020.08.19

அனைத்து பங்குகளின் விலைச்சுட்டெண்
5,351.03

S&P SL20 விலைச் சுட்டெண்
2,370.29

## நாளாந்த பங்குச் சந்தை நிலைவரம்



2020.08.19

### TOP 10 விலை உயர்ந்த, சரிவடைந்த நிறுவனங்கள்

| விலை உயர்ந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| ப்ளூ டயமன்ட்ஸ் | 0.40 | 0.50 | 0.10 |
| டீஸ் அக்ரோ | 0.40 | 0.50 | 0.10 |
| ப்ரௌன் இன்வஸ்மன்ட்ஸ் | 2.20 | 2.70 | 0.50 |
| எல் ஓ எல் சி டெவ் பின். | 30.60 | 36.00 | 4.40 |
| ரேணுகா கெப்பிடல் | 3.30 | 3.80 | 0.50 |
| பேருவல ரீசோர்ட்ஸ் | 0.70 | 0.80 | 0.10 |
| கொம் லீஸ் என்ட் பின். | 2.90 | 3.30 | 0.40 |
| முல்லர்ஸ் | 0.80 | 0.90 | 0.10 |
| பிபீபீ ஹோல்டிங்ஸ் | 9.80 | 10.70 | 0.90 |
| மல்டி பின். | 8.90 | 9.70 | 0.80 |

| விலை சரிவடைந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| இன்ட்ரஸ்ரியல் எசப் | 0.30 | 0.20 | (0.10) |
| ப்ரைம் பின். | 11.90 | 10.30 | (1.60) |
| சி டி லேண்ட் | 29.70 | 27.20 | (2.50) |
| லயன் ப்ரேவரி | 560.30 | 520.00 | (40.30) |
| ப்ரின்ட் கெயார் பிஎல்சி | 27.20 | 25.30 | (1.90) |
| மெக்வூட்ஸ் எனர்ஜி | 1.70 | 1.60 | (0.10) |
| டெல் லங்கா | 10.90 | 10.30 | (0.60) |
| மகாவலி ரீச் | 13.80 | 13.10 | (0.70) |
| லங்கா வெஜ்ஜர்ஸ் | 41.90 | 40.00 | (1.90) |
| ஹேலிஸ் | 189.90 | 181.50 | (8.40) |

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### TT RATES

ISSUED BY: INTERNATIONAL OPERATIONS DEPARTMENT
DATE : 19 AUGUST 2020

| CURRENCY | BUYING RATE | SELLING RATE |
|---|---|---|
| Australian Dollar | 130.42 | 136.54 |
| Canadian Dollar | 137.31 | 142.75 |
| Chinese Yuan (Renminbi) | 25.85 | 27.42 |
| Euro | 216.34 | 223.86 |
| Japanese Yen | 1.71 | 1.78 |
| Singapore Dollar | 132.44 | 137.67 |
| Sterling Pound | 240.38 | 248.15 |
| Swiss Franc | 200.17 | 207.85 |
| US Dollar | 182.14 | 186.44 |

| COUNTRY | CURRENCY | INDICATIVE RATE |
|---|---|---|
| Bahrain | Bahrain Dinar | 488.30 |
| Kuwait | Kuwait Dinar | 602.64 |
| Oman | Oman Rial | 478.10 |
| Qatar | Qatar Riyal | 50.24 |
| Saudi Arabia | Saudi Arabian Riyal | 49.07 |
| UAE | UAE Dirham | 50.11 |

**சர்வதேச பெற்றோலிய பொருட்களின் விலை**

| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் | |
|---|---|
| பிரென்ட் | 45.07 அமெ.டொ. / பீப்பாய் |
| ஒபெக் | 44.49 அமெ.டொ. / பீப்பாய் |

| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் -சிங்கப்பூர் சந்தை | |
|---|---|
| பெற்றோல் | 47.95 அமெ.டொ. / பீப்பாய் |
| டீசல் | 48.11 அமெ.டொ./ பீப்பாய் |
| மண்ணெண்ணெய் | 43.06 அமெ.டொ. / பீப்பாய் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2020 ஒகஸ்ட் 18 இலுள்ளவாறான SLIBOR வீதங்கள்**

| | |
|---|---|
| மறு நாள் | 5.53 |
| 7 நாள்கள் | 5.92 |
| 1 மாதங்கள் | 6.05 |
| 3 மாதங்கள் | 6.96 |
| 6 மாதங்கள் | 7.61 |
| 12 மாதங்கள் | 8.50 |

# BID2WIN போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பரிசுகள்

*zMessenger* நிறுவனம் *Hutch* நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த *BID2WIN* போட்டி அண்மையில் நிறைவடைந்ததுடன், இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு ஊக்குவிப்புச் செயற்றிட்டங்களின் வெற்றியாளர்களுக்கு இதன் போது பரிசுகளும் வழங்கப்பட்டன.

2020 பெப்ரவரி 1ஆம் திகதி முதல் மார்ச் 31ஆம் திகதி வரை இடம்பெற்ற *Wagon R* கார் ஊக்குவிப்பின் வெற்றியாளராக கடுவலையைச் சேர்ந்த அசேன் இமந்த குணசேன மற்றும் 2020 ஜூலை 1ஆம் திகதி முதல் ஜூலை 20ஆம் திகதி வரையான *Honda Dio*வைக் ஊக்குவிப்பின் வெற்றியாளராக மஸ்பொத்தயைச் சேர்ந்த பி.ஏ.ஜே. காமினி பெரேராவும் தெரிவாகினர்.

*BID2WIN*, மொபைல் சந்தாதாரர்களிடையே மிகவும் பிரபலமான போட்டியாகும். இது குறுந்தகவல் மூலமான விலைகோரல் மூலம் பாரிய பரிசுகளை வெல்லும் வாய்ப்பை வழங்குகின்றது. இதற்கு அவர்கள் செய்ய வேண்டியது மிகவும் குறைந்த தனித்துவமான விலைகோரல் பெறுமதியை முன்வைப்பதாகும். இதன்போதுவெற்றியாளருக்கு ஒதுக்கப்பட்ட பரிசு வழங்கப்படும்.இந்த போட்டியை மிகவும் சுவாரஸ்யமாகவும் உற்சாகமாகவும் ஆக்குவது என்னவென்றால், மொபைல் போன்கள், மோட்டார் பைக்குகள், கார்கள் மற்றும் பல புதிய பரிசுகள் சீராக அறிமுகப்படு த்தப்படுகின்றமையாகும். போட்டியின் ஏற்பாட்டாளர்கள் போட்டியின் தொடக்கத்தையும் முடிவையும், பரிசு விபரங்களையும்மற்றும்ஒவ்வொரு போட்டியின் வெற்றியாளர்களையும் எஸ்.எம்.எஸ் அல்லது ஒளிபரப்பு ஊடகங்கள் வழியாக அறிவிக்கின்றனர்.




# புகைப்பரிசோதனை சேவைக்கு வரவேற்பு

*Drivegreen*, தனது அறிவார்ந்த, திறமைமிக்க ஊழியர்களினால் வழங்கும் சிறந்த சேவைக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து அதிகளவு வரவேற்பைப் பெற்றுள்ளது. நிறுவனத்தினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்த கருத்தாய்வினூடாக இது கண்டறியப்பட்டிருந்தது.

வாடிக்கையாளர்களை மய்யப்படுத்திய, நட்பான மற்றும் கவர்ச்சிகரமான சேவை போன்றவற்றின் காரணமாக, வாடிக்கையாளர்களினால் தமது வாகனப் புகைப்பரிசோதனைத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள தொடர்ச்சியாக *Drivegreen*ஐ தாம் தெரிவு செய்வதாக இந்த ஆய்வினூடாக கண்டறியப்பட்டிருந்தது.

2008ஆம் ஆண்டில் *CleanCo* லங்கா (பிரைவட்) லிமிடெட்டின் இனால் நிறுவப்பட்ட *Drivegreen*இன் உயர் பரிசோதனை சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் போன்றன சர்வதேச பரிசோதனை நியமங்களின் பிரகாரம் அமைந்துள்ளதுடன், திறன் படைத்த, நேர்மையான மற்றும் அர்ப்பணிப்பான செயலணியினரால், வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் சேவையாற்றும் மனப்பாங்குடன் சிறந்த புகை பரிசோதனை சேவை வழங்கப்படுகின்றது.

